Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 158 சுபகிருது வருடம், தை மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை (30.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 07, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


### கமெண்ட் கந்தர்...







எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேச்சைக் குழுக்கள் பல ஒன்றாக இணைந்து சுயாதீன அரசியல் அணி என்ற பெயரில் களமிறங்கவுள்ளதாக தெரிய வந்தது.

பிரதான அரசியல் கட்சி ஒன்று பல இடங்களிலும் சுயேச்சைக் குழுக்களை நிறுத்தியுள்ளதால் அந்த சுயேச்சைக் குழுக்களே இவ்வாறு அரசியல் கூட்டணியொன்றை அமைக்கவுள்ளதாக சொல்லப் படுகிறது. ஆளுங்கட்சியின் அரசியலை வழிநடத்தும் ராஜபக்ஷ ஒருவர் இதன் பின்னணியில் இருப்பதாக தகவல்.



# ஜனக்க பதவி நீக்கம்!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் விரைவில் நியமனமென அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

நா.தினுஷா

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் இதுவரையில் முன்வைக்கப்பட்ட சகல யோசனைகளும், ஆணைக்குழுவென்ற பெயரில் ஜனக்க ரத்நாயக்க எனும் தனி நபரொருவரால் எடுக்கப்பட்டவையாகும். இதனை அந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் மூவரும் உறுதிப்படுத்தியிருப்பதாக தெரிவித்துள்ள மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை... 02 பக்கம்



## எதிர்கொள்ளத் தயார்!

### குற்றப்பத்திரிகை தொடர்பில் ஜனக்க பதிலடி

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலை வருக்கு எதி ராக பாராளுமன்றத்தில் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக... 02 பக்கம்

## திருமலையில் இருவர் கொலை

### காணித் தகராறில் விபரீதம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை புல்மோட்டை பகுதியில் காணித் தகராறில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவர் உயிரிழந்துள்ள நிலையில், 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் இடம் பெற்றுள்ளது. புல்மோட்டை பம்ஹவுஸ் என்ற இடத்தில் விவசாய காணிக்குள் ஏற்பட்ட எல்லை... 02 பக்கம்

## இலங்கை மனித உரிமைகள்; ஐ.நா. சபையில் மீளாய்வு

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய கால மீளாய்வு செயற்குழுவால் நான்காவது தடவையாக பெப்ரவரி முதலாம் திகதி ஆராயப்படுமென மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பாய்வுகள் முறையே மே 2008, ஒக்டோபர் 2012 மற்றும் நவம்பர் 2017இல் நடந்தன. 02 பக்கம்

## எவருக்கும் தலைசாய்க்காமல் கடனற்ற பொருளாதார நோக்கு

### ஜனாதிபதி ரணில் அநுராதபுரத்தில் அறிவிப்பு; அரச ஊழியர்களுக்கு நிவாரண கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை



அநுராதபுர இராச்சியத்தின்போது கடன் பெறாமல் பலமான பொருளாதாரத்தை கட்டியெழுப்பியது போன்று அடுத்த 05 முதல் 10 வருடங்களில் எவருக்கும் தலைசாய்க்காமல்... 02 பக்கம்

## உள்ளூராட்சித் தேர்தல் வர்த்தமானி தாமதம்

### அச்சகத் திணைக்களத்துக்கு அனுப்பப்படவில்லையென அரசாங்க தகவல் திணைக்களம் அறிவிப்பு

நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான வர்த்தமானி, அச்சிடும் நடவடிக்கைகளுக்காக இன்னும் அச்சகத் திணைக்களத்துக்கு... 02பக்கம்

## தேசிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்

### பொலிஸார் தீவிர விசாரணை

நா. தினுஷா

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான கே.பி.பி. பத்திரன, எஸ்.பி.திவாரத்ன மற்றும் எம்.எம்.மொஹமட்... 02 பக்கம்

இந்திய வம்சாவளி மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, அவர்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் வகையில் ஹட்டன் நகரில் நேற்று பாரிய ஊர்வலம் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: எஸ்.கணேசன்)



## தேர்தல் ஆணைக்குழுவின் மற்றுமொரு உறுப்பினருக்கும் கொலை மிரட்டல்

தேர்தல் ஆணைக்குழுவின் மற்றொரு உறுப்பினருக்கு நேற்று முன்தினம் இரவு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

ஆணைக்குழு உறுப்பினர் எம்.எம்.மொஹமட் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இதற்கு முன்னர் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் எஸ்.பி.திவரத்னவுக்கு... 02 பக்கம்

## ஆறாயிரம் நிபுணர்கள் வெளியேற்றம்

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட... 02 பக்கம்

## தேர்தலை ஒத்திவைக்க அரசு கடும் பிரயத்தனம்

### ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டை பெற நடவடிக்கை

கே.சுபானி

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை குறிப்பிட்ட காலத்துக்கு ஒத்திவைக்க தேர்தல் ஆணைகுழுவின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கான யோசனையொன்றை அரசாங்கம் முன்வைத்துள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

## கிழக்கில் புதிய முஸ்லிம் அரசியல் அணியொன்றை உருவாக்க வெளிநாட்டுத் தூதரகமொன்று முயற்சியா?



### கொழும்பில் கடந்த வாரம் முக்கிய சந்திப்பு

த.யுவராஜ்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட பல்வேறு அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்கள் தயாராகிவரும் நிலையில், கிழக்கில் புதிய அரசியல் அணியொன்றை உருவாக்கும் முயற்சியில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகமொன்று ஈடுபட்டுள்ளதாக நம்பகரமாக அறியமுடிகின்றது. 02 பக்கம்




எந்த இடத்திலிருந்தாலும் அதே இடத்திலிருந்தவாறு
சேமிப்பு கணக்கொன்றை இலகுவாக ஆரம்பித்திடுங்கள்

PEOPLE'S PAY

இப்போது PEOPLE'S PAY APP ஊடாக இருந்த இடத்திலிருந்தே சேமிப்பு கணக்கொன்றை அக்கணமே ஆரம்பியுங்கள்.

1. People's Pay app I Download செய்யுங்கள்
2. உங்கள் விபரங்களை உள்ளிடுங்கள்
3. டிஜிட்டல் சேவைகளுக்கு விண்ணப்பியுங்கள்
4. உங்கள் பொருத்தமான நேரத்திற்கு Non face to face call ஒன்றுக்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்

நீங்களும் இன்றே People's pay app பெற்றுக்கொடுக்கும் சிறந்த வசதிகளைப் பெற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் சுதந்திரத்தை அனுபவித்திடுங்கள்

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

### தேசிய தேர்தல்...

ஆகியோருக்கு தொலைபேசி அழைப்பினூடாக முன்னெடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் சம்பவம் வெளிநாட்டிலுள்ள நபரொருவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், குறித்த நபர் யார், அழைப்பு வந்த தொலைபேசி இலக்கத்துக்கு உரிமையுடைய நபர் யார் என்பது குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தேர்தல் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களுக்கு தொலைபேசியியினூடாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஆணைக்குழுவின் உறுப்பினர் பத்திரணவால் பதிவுசெய்யப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கமைய இதுதொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, ஆணைக்குழுவின் இன்னுமொரு உறுப்பினராக திவாரத்னவால் கடவத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பில் கடவத்த பொலிஸாரும் நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆணைக்குழுவின் இன்னுமொரு உறுப்பினரான மொஹ மட்டுக்கும் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பில் நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

ஒரு தொலைபோசி இலக்கத்தினூடாகவே இந்த உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப் பட்டுள்ளமை விசாரணைகளில் உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது. இந்த தொலைபேசி இலக்கம் தென் மாகாணம், காலி மாவட்டத்திலுள்ள முகவரியொன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையும் உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த தொலைபேசி இலக்கம் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரியைச் சேர்ந்த நபர் தற்போது இலங்கையில் இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த முகவரியைச் சேர்ந்த நபருக்கு எதுவும் தெரியாது என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் இந்தத் தொலைபேசி அழைப்பு வெளிநாடொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது உறுதியாகியிருக்கிறது.

இந்நிலையில், இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினதும் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உதவியுடன் அடுத்தகட்ட விசாரணைகளை முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த அழைப்பை மேற்கொண்டது யார், இந்தத் தொலைபேசி இலக்கம் உறுதியாக யாருக்கு சொந்தமானது போன்ற விடயங்கள் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த அச்சுறுத்தல் சம்பவங்கள் குறித்து முறைப்பாடு பதிவுசெய்துள்ள ஆணைக்குழு உறுப்பினர்கள் மூவரினதும் வீடுகளுக்கும் ஆயுதம் தாங்கிய படைகளினால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகிறார்கள் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### எதிர்கொள்ளத்..

அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ள நிலையில், அதனை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க பதில் வழங்கியுள்ளார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது, குற்றப் பத்திரிகையை எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

### உள்ளூராட்சி..

வழங்கப்படவில்லை என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று விசேட அறிவித்தலொன்றை வெளியிட்டு அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தினித் கருணாரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கத் தேவையான வர்த்தமானி அறிவிப்பானது, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கையொப்பத்துடனான வர்த்தமானி அச்சிடுவதற்காக இதுவரை அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று அவர் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

### தேர்தலை ஒத்திவைக்க...

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பிலான வழக்கு எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதன்போது மேற்படி யோசனையை முன்வைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தேர்தலுக்குத் தேவையான பணத்தை ஒதுக்கீடு செய்வதில் நிதியமைச்சுக்கு ஏற்பட்டுள்ள சிரமம், பொலிஸாருக்கு தேர்தல் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவதிலுள்ள சிரமம், தேர்தலின்போது எரிபொருள் மற்றும் எரிசக்தி வழங்குவதிலுள்ள சிரமம், தேர்தல் எல்லை நிர்ணயப் பணிகள் இதுவரை நிறைவடையாமை, தேர்தல் செலவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகள் இதுவரை முறையாகத் தயாரிக்கப்படாமை, இளைஞர் பிரதிநிதித்துவம் 30 ஆக உயர்த்தப்படுதல் போன்ற பல விடயங்கள் தேர்தலை ஒத்திவைப்பதற்கு காரணங்களாக தெரிவிக்கப்படுகின்றன.

அரசின் இந்த யோசனை திறந்த நீதிமன்றில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இந்த பிரேரணையை சமர்ப்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும், அதே ஆணைக்குழுவின் இணக்கத்துடன் தேர்தலை குறிப்பிட்ட காலத்திற்கு ஒத்திவைக்குமாறும் கோருவதாகவும் அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### ஜனக்க..

எடுக்கவுள்ளதுடன், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அறிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது ஜனக்க ரத்நாயக்கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் யோசனை முன்வைக்கவுள்ளதாகவும் ஜனக்க ரத்நாயக்கவுக்கு பதிலாக புதிய தலைவரை ஆணைக்குழுவுக்கு நியமிக்கவுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, அரச நிறுவனத்தின் செயற்பாடுகளில் மனித உரிமைகள் ஆணைக்குழு தேவையின்றி தலையிடுகிறது. அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் தலையிடும் அதிகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இல்லை. எனவே, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தான் வெளியிடும் சகல கருத்துகளையும் தானே பொறுப்பேற்கத் தயாரகவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் நேற்று (29) இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட விடயங்களை அமைச்சர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தீர்மானங்கள், ஜனக்க ரத்நாயக்கவால் எடுக்கப்படும் தனிநபர் தீர்மானங்களாகும். அதனை அந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களே உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு, அந்த ஆணைக்குழுவில் இருக்கும் ஏனைய மூன்று உறுப்பினர்களும் கடந்த 23ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் கடநத் காலத்தில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் கூட ஆணைக்குழு என்ற பெயரில் தனிநபரால் அனுப்பிவைக்கப்பட்டது என்பது இதில் உறுதிப்படுத்தப்படுவதுடன், சட்ட விரோதமாகவும் ஆணைக்குழுவின் சட்டத்தை மீறி அமைச்சரவைக்கான கடிதங்கள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதனால், அரசாங்கம் என்ற அடிப்படையில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன், அவரை பதவியிலிருந்து நீக்குவதற்குத் தேவையான குற்றப்பத்திரிகையும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஆளுங்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனக்கு இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள். ஜனக்க ரத்நாயக்க எனும் தனிநபரின் நிலைப் பாட்டுக்கமையவே கடந்த காலங்கள் முழுவதிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஜனக்க ரத்நாயக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் இருக்கும் ஏனைய உறுப்பினர்களை தவிர்த்துவிட்டு தனி தீர்மானங்களினால் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கிறார். இதற்கான முழுப் பொறுப்பையும் அவரே ஏற்கவேண்டும். பாராளுமன்ற சட்டத்திட்டங்களின் பிரகாரம் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டிய விதம் தொடர்பில் செயற்பட்டு வருகிறோம்.

இதற்கப்பால் ஜனக்க ரத்நாயக்க தொடர்பில் பல்வேறு தகவல்கள் எங்களுக்கு கிடைத்தவண்ணம் இருக்கின்றன. ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் தனியார் வங்கியொன்றுக்கான தலைமைப் பதவிக்கு இவர் விண்ணப்பித்திருந்தபோதும் இவர் மீது இருந்த குற்றச்சாட்டுகளின் காரணமாக மத்திய வங்கி அதனை நிராகரித்திருந்தது. இந்நிலையில், அரச நிறுவனங்களின் பொறுப்புகளுக்கு இவரை நியமிக்க முடியாது என்று 2012ஆம் ஆண்டில் செயற்பட்ட பாராளுமன்றத் தெரிவு குழுக்கள் கூட அறிவித்திருக்கின்றன.

இதேவேளை, மின் விநியோகத்தை தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கான வாய்ப்புகள் இருந்தும், அதனை பெற்றுக் கொடுக்க மறுப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்திருக்கிறார். இதனை முழுமையாக மறுக்கிறோம். இதுவரையில் மின்சார சபை எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு 112 மில்லியன் ரூபா செலுத்தவேண்டியுள்ளது. எனவே, இந்தத் தொகைக்கான எரிபொருளை கடனுக்கே மின்சார சபை பெற்றுக்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் வழங்கப்பட்ட எரிபொருளுக்கான 55 பில்லியன் ரூபா இதுவரையில் மின்சார சபையிடமிருந்து கிடைக்கவில்லை. அதற்குக் காரணம், மின்சார சபை தனியார் மின் உற்பத்தி நிலையங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சேவைக்காக 60 பில்லியன் டொலர் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 14 நாட்களுக்குத் தேவையான மேலும் 2.7 பில்லியன் ரூபா கடனுக்கான நெப்தா பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு இந்த எரிபொருளை கொடுத்தால் இதற்கான நிதியை பெற்றக்கொடுக்க ஒருமாத காலம் எடுக்கும்.

மறுபுறம் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் அமைச்சின் உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கு அப்பால் சென்று வேறு சில யோசனைகளில் கையொப்பமிடுமாறு அச்சுறுத்தியிருக்கிறார்கள். நிறுவனத் தீர்மானங்கள் குறித்து தலையிடும் அதிகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் அதிகாரமில்லை. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்து நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யவும் நடவடிக்கை எடுப்போம். மனித உரிமைகள் ஆணைக்குழு அமைச்சின் உறுப்பினர்கள் மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை ஏற்கமுடியாது. அன்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பதிவுகளை வழக்கு விசாரணைக்கு எடுக்க வேண்டி ஏற்படும் - என்றார்.

### கிழக்கில் புதிய..

இது தொடர்பான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றதாக தெரியவருகிறது. கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவரும், அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசல் தலைவருமான சபீஸ் தலைமையிலான குழுவொன்றுடன் இஸ்லாமிய நாடொன்றின் தூதரக உயர்மட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நீண்ட பேச்சுகளை நடத்தியுள்ளதாக அறியமுடிந்தது.

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் அரசியல் கட்சிகள் பாரம்பரிய அரசியலை செய்வதாலும், இளைஞர்கள் முன்னணி கொண்ட அரசியல் அமைப்பொன்று இல்லாத காரணத்தினாலும் கிழக்கு மாகாணத்தில் புதிய அரசியல் முன்னணியொன்று உருவாகுவது தங்களது விருப்பென மேற்படி சந்திப்பில் தூதரக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தகவல்களை பெற அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசல் தலைவர் சபீஸை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, இப்படியான சந்திப்பு நடந்தது என்பதை அவர் உறுதிப்படுத்தியபோதும் அது தொடர்பான மேலதிக தகவல்களை வழங்க மறுத்துவிட்டார்.

### ஆறாயிரம்...

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என சுமார் ஆறாயிரம் நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மூன்று வருடங்களில் இவ்வாறு நிபுணர்கள் வெளியேறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வருமான வரி அதிகமாக விதிக்கப்படுவதால் எதிர்காலத்தில் தொழில் வல்லுநர்கள் மேலும் நாட்டைவிட்டு வெளியேறும் அபாயம் காணப்படுகிறது. இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய எட்டு இலட்சம்பேர் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அத்துடன், ஆறு இலட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். 2021ஆம் ஆண்டில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமானோர் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 136 வீதத்தால் அதிகரித்துள்ளது.

திறமை படைத்த நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் பாரிய இழப்பு ஏற்படும். இதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ற வகையில் அவசரமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

### இலங்கை மனித ..

மூன்று நாடுகள் சார்ந்த அறிக்கையாளர்கள் தயாரித்த இந்த மீளாய்வு அறிக்கையை இணையத்தளத்தில் பார்வையிட முடியும். பயங்கரவாதத் தடைச்சட்டம், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக ஏனைய நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்ட முன்கூட்டிய கேள்விகளுடன் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நான்காவது மதிப்பாய்வில், முந்தைய மதிப்பாய்வுகளின்போது முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்த அரசுகள் எடுத்த நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படும். முந்தைய மதிப்பாய்வின்போது, அவை உறுதியளித்த விவகாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதும் ஆராயப்படும்.

இந்த மீளாய்வின்போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் இலங்கை பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

அல்ஜீரியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் கத்தார் ஆகிய மூன்று நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் மீளாய்வுக்கான அறிக்கையாளர்களாக பணியாற்றுகின்றனர்.

### திருமலையில்...

பிரச்சினை காரணமாகவே இரு குழுக்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த கைகலப்பில் புல்மோட்டை- 01 வட்டாரத்தைச் சேர்ந்த எஸ்.எம்.பதுர் (42 வயது) மற்றும் புல்மோட்டை, நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த எம்.எம்.சலீம் (42 வயது) ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளதாகவும், உயிரிழந்தவர்களின் சடலம் புல்மோட்டை தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, படுகாயமடைந்த நான்கு பேர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பில் புல்மோட்டை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தேர்தல் ..

நேற்று மீண்டும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்களான கே.பி.பி.பத்திரன மற்றும் எஸ்.பி.திவரத்னவுக்கு ஆணைக்குழுவிலிருந்து இராஜினாமா செய்யாவிட்டால் கொலை செய்யப்போவதாக மிரட்டல் விடுக்கப்பட்டது. இதையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்தது.

அதன்படி, அந்த இரு உறுப்பினர்களின் வீடுகளுக்கும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு எம்.எம்.மொஹமட்டுக்கு மிரட்டல் அழைப்பு வந்ததாகக் கூறப்படும்போது எஸ்.பி.திவரத்னவுக்கு வட்ஸ்அப்பில் மிரட்டல் குறுஞ்செய்தி வந்தது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு தேவையான பொலிஸ் பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### எவருக்கும்..

பெருமையுடன் வாழக்கூடிய, கடனற்ற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே தமது நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் வருமான நிலைமை ஸ்திரமாகி, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால், இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் அனைத்து அரச ஊழியர்களுக்கும் நிவாரணமாக மேலதிக கொடுப்பனவுகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அநுராதபுர புதிய அடமஸ்தானாதிபதி சியமோபாலி மகா நிக்காய மல்வத்து பீட கண்டி வலய பிரதம சங்கநாயக்க தேரர் பல்லேகம ஹேமரத்னவுக்கு ஸ்ரீ சன்னஸ் பத்திரம் கையளிக்கும் முகமாக வரலாற்றுச் சிறப்புமிக்க ஜய ஸ்ரீ மகா போதி மகா விகாரையில் நேற்று முன்தினம் (28) பிற்பகல் ஸ்ரீ சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று சகலரும் எதிர்நோக்கியுள்ள சிரமங்களை நன்கு புரிந்துகொண்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, 2024ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார முன்னேற்றத்துடன் சம்பள உயர்வு உட்பட அனைத்து மக்களுக்கும் நிவாரணங்களை வழங்க முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

புதிய அடமஸ்தானாதிபதிக்கு ஸ்ரீ சன்னஸ் பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையளித்ததோடு விஜினி பத்திரத்தை பிரதமர் தினேஷ் குணவர்தன வழங்கினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங், அநுராதபுர மகா விகாரையின் அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு தொடர்பில் விசேட சட்டமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது,

ஜப்பானுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பொருளாதாரத்தைக் கொண்டிருந்த ஆசிய நாடு இலங்கை. ஆனால், இன்று 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நேரத்தில், பொருளாதாரத்தில் மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிறோம்.

அதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், நாட்டின் பொருளாதார நிலை எப்படி இருக்கிறது என்பதில் அனைத்து பொதுமக்களும், மதகுருமார்களும் கவனம் செலுத்துகிறார்கள். இந்தப் புரிதலுடன் நாம் எதிர்காலத்தில் பணியாற்ற வேண்டும்.

கடனை மீளச் செலுத்த முடியாதது தொடர்பாக கடந்த ஆண்டு ஏப்ரலில், சர்வதேசத்திற்கு அறிவித்தோம். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கடன் மறுசீரமைப்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்தேன். நாங்கள் பெற்ற கடன் தொகை அதிகமாக இருப்பதால் கடனை மீளச் செலுத்த முடியாது என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையில், சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி திட்டம் தயாரிக்க பரிந்துரைக்கப்பட்டது. முதலில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி திட்டம் தயாரிக்குமாறு, எமக்கு கடன் கொடுத்த சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் அறிவித்தன. அதன்பின்னர் அந்த நாடுகளினால் வழங்கக்கூடிய உதவிகள் குறித்து ஆலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்தக் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்பது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டியிருந்தது. இந்த உதவி இல்லாமல் எமக்கு முன்னோக்கிச் செல்ல முடியாது. இந்த உதவி கிடைக்காவிட்டால், நமது பொருளாதாரம் வீழ்ச்சியடையும். எமது நாட்டிலுள்ள நிதியும், அந்நியச் செலாவணியும் போதுமானதாக இல்லை. கடந்த ஆண்டு நமது பொருளாதார வளர்ச்சி விகிதம் 11 மறைப்பெறுமானமாக இருந்தது. இந்த ஆண்டு, திட்டமிட்டு செயற்பட்டால் அதனை மறை 3.5 ஆகக் குறைக்கலாம். உலகளாவிய பிரச்சினைகள் இருந்தால் அது மறை 4 ஆக இருக்கும். ஆனால், மறை 3.5மாக இருக்கும் என்றே எதிர்பார்க்கிறோம். 2024ஆம் ஆண்டாகும்போது எமது பொருளாதாரத்தை முன்னோக்கிக்கொண்டு செல்ல முடியும். எங்களிடம் டொலர்கள் இல்லாத நிலையிலும் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளால் எங்களுக்கு சில உதவிகள் கிடைத்துள்ளன. எதிர்காலத்தில் இன்னும் பல உதவிகள் கிடைக்க இருக்கின்றன.

மேலும், தேவையான உரம் வழங்கப்படுவதால், இம்முறை பெரும்போகம் வெற்றியடைந்து நெல் மேலதிகமாக இருக்கும். இந்தத் திட்டத்திலிருந்து விலகிச் சென்றால், கடந்த ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதங்களில் இருந்த நிலைமைக்கு நாடு செல்லும். அப்படி நடந்தால் மேலும் கஷ்டத்தை சந்திக்க வேண்டியிருக்கும். மூன்று வாரங்களுக்கு கூட மருந்து வாங்க எங்களிடம் பணம் இருக்காது.

தமது நாட்டு வருமானமும் குறைந்துள்ளதாகவும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அதிகபட்ச சுமையை தமது மக்களால் சுமக்க முடியாவிட்டால், தமது ஆதரவை வழங்குவது கடினமாக இருக்கும் என எமக்கு கடன் வழங்கிய நாடுகள் தெரிவித்துள்ளன. ஏனென்றால், தங்கள் மக்களிடம் இருந்து வரி வசூலித்த பணத்தையே இவ்வாறு தந்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

2019இல் நமது மொத்த வருவாய், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆகும். ஆனால், வரிக் குறைப்பினால், 2022ஆம் ஆண்டுக்குள் மொத்த வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4% ஆகக் குறைந்துள்ளது. உதவி வழங்குவதாக இருந்தால் 2019ஆம் ஆண்டு இருந்த நிலைக்கு மொத்த வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆக உயர்த்த வேண்டும் என்று அந்த நாடுகள் அறிவித்துள்ளன. அதாவது, தற்போதைய வருமானம் 03 வருடங்களில் 75% ஆக அதிகரிக்கப்பட வேண்டும். அதுதான் எங்களுக்கு இருக்கும் சவால். அப்படிச் செய்யாவிட்டால் நமக்கு உதவி கிடைக்காது. அப்படிச் செய்தால் பெரும் சுமையைச் சுமக்கவேண்டியிருக்கும். நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அவர்கள் முன்வைக்கும் விடயங்களை வைத்து நாம் வாதிடுவது கடினமானது.

இந்த நிலைமையை மேலும் விளக்குவதாக இருந்தால், 2019இல் 15 இலட்சம் வருமான வரி தொடர்பான கோப்புகள் இருந்தன, அது தவிர வற் வரி மற்றும் தேசத்தை அபிவிருத்தி செய்யும் வரி ஆகியவற்றை செலுத்துபவர்கள் தொடர்பான ஒரு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரம் கோப்புகள் இருந்தன. மொத்தம் 16 இலட்சம் கோப்புகள் இருந்தன. இந்த வரிகள் நீக்கப்பட்டதன் மூலம், 2021 டிசம்பர் மாதத்தில் வருமான வரி செலுத்தும் 04 இலட்சம் கோப்புகள் எங்களிடம் இருந்தன. 15 இலட்சத்திலிருந்து 04 இலட்சமாக இது குறைந்துள்ளது.

மேலும், ஏனைய வரி செலுத்தும் கோப்புகள் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்திலிருந்து 9,976ஆக குறைந்துள்ளது. அந்தவகையில் எங்களிடம் இருந்த வரிக் கோப்புகள் 16 இலட்சத்திலிருந்து 04 இலட்சமாக குறைந்துள்ளது. அதன்படி, இந்த வரிகளை வசூலிப்பதைக் குறைத்து, எங்கள் மக்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய வரியை உங்களுக்கு எப்படித் தர முடியும் என அந்த நாடுகள் எம்மிடம் வினவின. அதன்படி, இந்த வரி விதிப்பை தற்போதைய நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தோம். இந்த நடவடிக்கையை மேற்கொள்ளாமல் எமக்கு முன்னேற முடியாது.

2023 ஜனவரி 25ஆம் திகதியன்று எங்களுக்குக் கிடைத்த வருமானம் 145 பில்லியன் ரூபா. சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி உட்பட அனைத்து மூலதனச் செலவினங்களுக்கும் 143 பில்லியன் செல்கிறது. மேலும், கடனை செலுத்த இன்னும் 355 பில்லியன்கள் தேவைப்படுகின்றன. ஜனவரி மாதத்தில் எங்களின் மொத்தச் செலவு 498 பில்லியன் ரூபாவாகும். ஆனால், எங்களின் வருமானம் 145 பில்லியன். முறையான திட்டமொன்று செயல்படுத்தப்பட்டால், காலப்போக்கில் இந்தச் சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கான திறன் நமக்கு இருக்கிறது.

மேலும் சில பிரச்சினைகள் உள்ளன. 2022ஆம் ஆண்டில் அரசு நிறுவனங்களின் நஷ்டம் 794 பில்லியன் ஆகும். அவற்றைச் செலுத்த இந்த ஆண்டு எங்களிடம் பணம் இல்லை. எனவே, இந்த இழப்பை ஈடுசெய்ய வேண்டும். இன்று மின்கட்டணப் பிரச்சினை அனைவரையும் பாதித்துள்ளது.

வரி வருவாயைப் பெறாவிட்டால், ஏனைய நாடுகளின் வரி வருவாயை வழங்க முடியாது என்று சர்வதேச நாணய நிதியம் எங்களுக்குத் சுட்டிக்காட்டியுள்ளது. அவர்கள் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்டினார்கள். நம் நாட்டில் கூடுதலாக வரிச் செலவுகள் பொதுமக்கள் மீதுதான் ஏற்றப்படுகிறது. தாய்லாந்து போன்ற நாடுகளில், அரசின் வருவாயில் 2.8% தான் தீர்வை வரி மூலம் கிடைக்கிறது. 30.1% வருமான வரியிலிருந்து பெறப்படுகிறது. இந்தியா தீர்வை வரிகளிலிருந்து 4.5% மற்றும் வருமான வரியிலிருந்து 45.6%மும் பெறுகிறது. நமது நாடு தீர்வை வரியிலிருந்து 26.3% மற்றும் வருமான வரியிலிருந்து 17.7% பெறுகிறது. எனவே, வரிகளை உயர்த்தும்போது, வருமான வரியை உயர்த்த வேண்டும் என்றும், ஏனைய வரிகளை வசூலிப்பதால், குறைந்த வருமானம் பெறும் மக்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த உண்மைகளை ஓர் அரசியல்வாதியாக பேசுவது கடினமான பணி. ஆனால், நான் வென்றாலும் தோல்வியடைந்தாலும் எப்போதும் உண்மையை சுட்டிக்காட்டுவேன். இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவை வழங்கவேண்டும் என அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# பாராளுமன்றத்தை வீடியோ பதிவுசெய்த இருவர் கைது

சந்தேகத்துக்கிடமான முறையில் பாராளுமன்றத்தை தொலைபேசியினூடாக வீடியோ பதிவுசெய்த இருவர் பாராளுமன்ற பொலிஸ் குழுவினரால் நேற்று (29) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் பெண்ணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக தலங்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளத.

சந்தேகநபர்கள் பாராளுமன்ற விளையாட்டு மைதானத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு நுழையும் வீதியினூடாக தியவன்னத ஓயாவின் கரைக்கு வந்து பாராளுமன்றக் கட்டடதொகுதிக்குரிய மரங்களுக்கிடையில் இருந்து வீடியோ பதிவு செய்ததாக பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடியோ பதிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இதுகுறித்து பாராளுமன்ற பிரதானிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டிருக்கின்றனர்.

# தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட விவகாரம்:

## அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டுமென்று பெவ்ரல் அமைப்பு அறிவிப்பு

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு யார் அச்சுறுத்தல் விடுத்திருந்தாலும், அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டுமென்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பின் (பெவ்ரல் அமைப்பு) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் நபர்கள், ஆணைக்குழு உறுப்பினர்களிடம் இந்த பாதுகாப்பை எத்தனை காலத்துக்கு வைத்துக் கொள்வீர்கள் என்றே தொடர்ச்சியாக கேள்வி எழுப்புகிறார்கள். இதனூடாக, அவர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு பாரதூரமான எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார்கள்.

ஒருவார காலப்பகுதிக்குள் ஒரேயொரு தொலைபேசி இலக்கத்தினூடாக



உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து, வட்ஸ்அப் செய்தி அனுப்பியும் அவர்களை இன்னும் கைதுசெய்ய முடியவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும். தற்போது நாம் விண்வெளிக்கு ஏவுகணை அனுப்பும் யுகத்தில் இருக்கிறோம். இலங்கையும் அவ்வாறான முயற்சிகளை எடுத்துவருகிறது.

இந்நிலையில், இந்த தொலைபேசி அழைப்பு எங்கிருந்து வருகிறது என்பதை தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் அது பாரதூரமான பிரச்சினையாகும். ஆட்சியாளர்கள் நிலையானவர்கள் அல்ல. அதிகாரிகளே தொடர்ச்சியாக கடமைகளில் நிலைக்கப்போகிறார்கள். ஆகவே, பொலிஸ்மா அதிபர் அவரின் மனசாட்சியின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

தனிநபரொருவரால் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தாலோ ஏதாவதொரு குழுவினரின் ஆதரவுடன் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தாலோ அரசியல் ஒப்பதுழைப்புடன் இடம்பெற்றிருந்தாலோ அதற்கான பொறுப்பை அரசாங்கம் கட்டாயம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் - என்றார்.



லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்துக்கு 'மாஸ்டர் பிரிண்டர்ஸ்' விருது இங்க்ரின் எக்கடமியின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வின்போது வழங்கப்பட்டது. இதற்கான விருதை அந்நிறுவனத்தின் அச்சகப் பிரிவு பொது முகாமையாளர் துஷார தனவீரஆராச்சி பெற்றுக்கொண்டார்.

# கெசல்கமுவ ஓயாவில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(எஸ்.கணேசன்)

காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீரேந்திச் செல்லும் பொகவந்தலாவை பொகவான கெசல்கமுவ ஓயாவில் ஆணொருவரின் சடலம் நேற்று (29) மீட்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சடலமாக மீட்கப்பட்ட நபர் நேற்று திடீரென காணாமல்போயுள்ளார். குறித்த நபரைத் தேடும் நடவடிக்கையை உறவினர்கள் முன்னெடுத்திருந்த நிலையில், குறித்த பிரதேசத்திலுள்ள ஒருவர் சடலம் தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்தில் உயிரிழந்த நபரின் பாதணிகள், குடை, மாதாந்த வைத்திய பரிசோதனை, புத்தகம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட குறித்த புத்தகத்தில், தனக்கு வியாதி தாங்க முடியவில்லை என்றும் தனது முடிவுக்கு தானே பொறுப்பு என்றும் தனது மகன் மிகவும் நல்லவர் என்றும் தன்னை அன்பாக பார்த்துக்கொள்வார் எனவும் யாரையும் தண்டிக்க வேண்டாம் என்றும் இறந்தவரின் கையெழுத்தில் இறப்பதற்கு முன்பே எழுதி வைக்கப்பட்டுள்ளமையும்



கண்டறியப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர் பொகவந்தலாவை பொகவானை தோட்டப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 75 வயதுடைய பெரியண்ணன் கருப்பையா என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுப் பெண்ணொருவரின் ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகள் களுத்துறையில் திருட்டு

பிரித்தானிய பெண் ஒருவர் கொள்வனவு செய்யப்பட்ட 18,500 ஸ்ரேலிங் பவுண்கள் பெறுமதியான வெள்ளைத் தங்கம் உள்ளிட்ட தங்க வளையல்கள், காதணிகள் உள்ளிட்ட நகைகள் களவாடப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை வடக்கு சுற்றுலா விடுதியொன்றில் தங்கியுள்ள பிரித்தானிய பெண் லிண்டா பிரவுன்மன் என்பவர் நேற்று முன்தினம் (28) இரவு செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாடுசெய்த பெண் களுத்துறை வடக்கு சுற்றுலா விடுதியிலிருந்து முச்சக்கர வண்டியில் அளுத்கம பகுதிக்குச் சென்று அங்குள்ள பிரதான நகை சந்தையில் தங்க ஆபரணங்களை கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தங்க நகைகள் ரூபாவின் பெறுமதியில் 83 இலட்சம் ரூபாவிற்கும் அதிகம் என விசாரணைகளில் தெரியவருகின்றது.

# ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதி அசுசாச நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை சந்திப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான புதிய பிரதிநிதி திருமதி அசுசாச குப்டா கடந்த வெள்ளிக்கிழமை (27) நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவை அவரது அமைச்சில் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது நீதியமைச்சிலுள்ள சட்ட வழக்குகள் மற்றும் வழக்குகளை துரிதமாக விசாரித்து உடன் தீர்ப்பு



வழங்குவது சம்பந்தமான அபிவிருத்தித் திட்டங்கள், அதற்கான நிதி நிலைமைகள், கணினிமயப்படுத்தல் போன்ற திட்டங்கள் பற்றியும் அமைச்சர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி பிரதிநிதியிடம் விளக்கமாகக் கூறினார்.

இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக வெளிநாடுகள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவிகளையும் பெற்றுத்தருமாறு அமைச்சர் வேண்டிக்கொண்டார்.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் தை மாதம் 16ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** வீட்டுக்கான முக்கிய செலவுகளை இன்று செய்வீர்கள், காரியங்கள் சற்றுத் தாமதமாகி பின் நிறைவேறும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும், உடல் நோய்கள் குணமடையும்.

**மிதுனம்:** ஆணவத்தை அடக்கினால் வெற்றி நிச்சயம், பயணங்களைக் குறைத்துக்கொண்டால் செலவுகள் கட்டுப்படும்.

**கடகம்:** முக்கிய நண்பர்களைச் சந்தித்து கலந்துரையாடுவீர்கள், வெளியிடப் பயணத்தால் நன்மைகள் உண்டு.

**சிம்மம்:** உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள், புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்.

**கன்னி:** தந்தையின் உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள், சொத்துகளை உரிய முறையில் பேணுங்கள்.

**துலாம்:** தொழில் இடத்தில் எதிலும் அவசர முடிவுகளை எடுக்காதீர்கள், உடல், மனம் இரண்டும் சோம்பிக் காணப்படும்.

**விருச்சகம்:** கௌரவமாக நடத்தப்படுவீர்கள், எண்ணிய காரியங்களை எளிதில் முடிப்பீர்கள்.

**தனுசு:** நீங்கள் எதிர்பார்த்த பணத் தொகை கிடைக்கும், எதிரிகளால் நன்மைகள் ஏற்படும்.

**மகரம்:** மனதை அங்குமிங்குமாக அலைய விடாதீர்கள், அதிர்ஷ்டத்தை நம்பி பணத்தை வீணடிக்காதீர்கள்.

**கும்பம்:** யாரையும் நம்பி ரகசியங்களை வெளிப்படுத்தாதீர்கள், வீடு வாகனங்களால் தொல்லைகள் உண்டு.

**மீனம்:** நீங்கள் நினைத்ததை தைரியத்துடன் சாதிப்பீர்கள், தேவைக்கேற்ப பணம் நிறைவைத் தரும்.

**திதி** : நவமி மு.ப. 10.12 வரை பின் தசமி தேய்பிறை
**நட்சத்திரம்** : கார்த்திகை இரவு 10.15 வரை ரோஹிணி
**யோகம்** : மரண யோகம் (சுப காரிய நன்மை இல்லை)
**வார சூலை:** வடமேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்** : பி.ப.12.33 மணி முதல் 1.33 மணி வரை
**ராகு காலம்** : 8.03 மணி முதல் 9.33 மணி வரை
**எமகண்டம்** : 11.03 மணி முதல் 12.33 மணி வரை
**குளிகை** : 2.03 மணி முதல் 3.33 மணி வரை
**சந்திராஷ்டமம்** : துலா ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**விஷேட தினம்** : கார்த்திகை விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# 200 வருட ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்து ஹட்டனில் மலையக மக்களின் ஊர்வலம்

(எஸ்.கணேசன்)

இந்திய வம்சாவளி மக்களான மலையக தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்து இவ்வருடத்துடன் 200 ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன. இதனை நினைவுகூர்ந்து ஹட்டன் மல்லியப்பு சந்தியிலிருந்து மக்களின் வாழ்வியலையும் கலை, கலாசார அம்சங்களையும் பிரதிபலிக்கும் வகையில் 1000இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட பாரிய ஊர்வலம் ஒன்று நேற்று (29) நடைபெற்றது.

குறித்த ஊர்வலம் ஹட்டன் மல்லியப்பு சந்தியில் ஆரம்பித்து ஹட்டன் நகர் ஊடாக ஹட்டன் டி.கே.டபிள்யு. கலாசார மண்டபத்தை சென்றடைந்தது.

குறித்த ஊர்வலத்தில் மலையகத்தை அபிவிருத்திசெய்ய தயங்குவது ஏன்?, மலையக மக்களை சிதைக்காதே?, உறுதியளித்த பல்கலைக்கழகம் எங்கே?, மலையக மக்களை சிதைக்காதே போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை காட்சிப்படுத்தியவண்ணம் ஊர்வலத்தில் சென்றதுடன், இவர்கள்






இந்தியாவிலிருந்து வரும்போது கொண்டுவந்த கலை அம்சங்களும் இதன்போது இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து ஹட்டன் டி.கே.டபிள்யு. கலாசார மண்டபத்தில் கலை, கலாசார அம்சங்கள் இடம்பெற்றதுடன், அவர்கள் தொடர்பான விசேட கருத்துரையும் இடம்பெற்றது.

இது குறித்து பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில்,

இவர்களின் வாழ்வில் சொல்லக்கூடிய அளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை. இந்த 200 வருடங்கள் கழிந்த நிலையில் இன்றும் கூட எங்களுக்கென்று தனியான வீடு கிடையாது, காணி கிடையாது, ஒழுங்கான பாதைகள், பாடசாலை, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத நிலையிலேயே நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். இதனை எடுத்துக்கூறும் முகமாகத்தான் இந்த 200 வருட ஊர்வலத்தை ஒழுங்குசெய்துள்ளோம். எதிர்காலத்திலாவது இவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து எங்கள் வாழ்வில் ஒளியேற்றுவார்கள் என்று நம்புகின்றோம் என தெரிவித்தனர்.

பேரணிக்கான ஏற்பாடுகளை தேசிய கிறிஸ்துவ குழு லங்கா சபை, மெதடிஸ்ட் தேவஸ்தானம் உட்பட அருட்தந்தையர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. குறித்த ஊர்வலத்தில் தோட்டத் தொழிலாளர்கள், மாணவர்கள், சிறுவர்கள், பொதுமக்கள் என சுமார் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# அனலைதீவு கடற்கரைப் பகுதியில் 4 மில்லியன் பெறுமதியான 12 கிலோ கேரள கஞ்சா மீட்பு

அனலைதீவு கடற்கரை பகுதியில் 12 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கடற்படையினரும் ஊர்காவற்றுறை பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் (28) மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கடற்கரை பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 06 கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த கேரள கஞ்சா 12 கிலோ 110 கிராம் எடையுடையதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் காரணமாக கடத்தல்காரர்கள் இந்த கஞ்சாவை கடற்கரையில் மறைத்து வைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.



இந்த கேரள கஞ்சாவின் மொத்த பெறுமதி சுமார் 4 மில்லியன் ரூபாவாகும்.

இந்த நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா கையிருப்பு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.



நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், அதற்கான ஒத்திகைகள் காலிமுகத்திடலில் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# 489 பேர் கைது

விசேட அதிரடிப்படை, பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் நேற்று (29) மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் 489 சந்தேக நபர்கள் போதைப் பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களின் 05 மணிநேர கூட்டு நடவடிக்கையின்போதே 489 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது 01 கிலோ ஹெரோயின் மற்றும் 01 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜனவரி 30ஆம் திகதி, திங்கட்கிழமை**

# மின்சக்தி அமைச்சர் காஞ்சன மக்கள் பக்கம் நிற்கக்கூடாதா?

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜனக்க ரத்னநாயக்கவை நீக்குவதற்கு அரசாங்கத்தின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அத்துடன், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நேற்று செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஆனாலும், அமைச்சரின் இந்த குற்றப்பத்திரத்தை எதிர்நோக்க தாம் தயார் என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ள நிலையில், மின்சக்தி அமைச்சருக்கும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவருக்குமிடையிலான கருத்துமோதல் தீவிரமடைந்துள்ளது. இருவரில் எவருமே நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காத நிலையில், குறிப்பாக மக்கள் பக்கம் நிற்கவேண்டிய அமைச்சர் காஞ்சன, ஜனக்க ரத்னாயக்கவை பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு மேற்கொள்ளும் செயற்பாடுகள் அருவருக்கத்தக்கதாக இருக்கிறது.

உயர்தரப் பரீட்சைக் காலத்தில் மின்வெட்டை செய்யாதீர்கள் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மனித உரிமைகள் ஆணைக்குழு வரை சென்று உத்தரவாதம் பெற்றாலும், 'மனித உரிமைகள் ஆணைக்குழு எல்லாம் ஓர் அமைப்பா' என்று எந்தவித அக்கறையுமில்லாமல் மின்வெட்டை நடத்திக்கொண்டிருக்கிறது மின்சக்தி அமைச்சு.

பரீட்சைக் காலங்களில் மின்வெட்டை அமுல்படுத்த மாட்டோமென இலங்கை மின்சாரசபையின் அதிகாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் உறுதியளித்தாலும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை. மனித உரிமைகளை நிலைநாட்டும் விடயத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏன் செய்கிறது என்று நினைத்துவிட்டார்கள் போலும்.

இதன்படி பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் இலங்கை மின்சார சபை செயற்படத் தவறியமை தொடர்பில் எதிர்வரும் இரு நாட்களில் சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

உயர்தரப் பரீட்சையின்போது மின்சார விநியோகம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மின்சக்தி அமைச்சின் எந்தவொரு அதிகாரிக்கும் அழுத்தம் கொடுக்கப்படவில்லை எனவும், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் அங்கிருந்த மின்சக்தி அமைச்சின் மேலதிக செயலாளரிடம் சட்டத்தை விளக்கியதாகவும் ரத்நாயக்க தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடலுக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், மேலதிக செயலாளர் ஒருவரின் பங்கேற்பே இந்தப் பிரச்சினைக்கு அடிப்படையானது என ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

சரியோ, பிழையோ இந்த மின்வெட்டு விடயத்தில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சொல்வது கொஞ்சம் நியாயமாகத்தான் இருக்கிறது. இப்போது பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டாயிற்று.

தேர்தல் என்று பேசினால் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை வெளியேற்ற முயற்சிப்பது, அவர்களை பிரித்தாளுவது, மின்வெட்டு என்று வந்தால் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்களைப் பிரித்து வெளியேற்றுவது என்று அன்று கருணாவைப் பிரித்துக் காரியமாற்றிய ரணிலின் அதே பாணி இன்னமும் தொடர்கிறது. இடையில் நேரம் கிடைக்கும்போது அரசியல் கட்சிகளைப் பிரிக்கும் வேலைகளையும் செவ்வனே செய்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்குவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி மக்களுக்கான சேவைக்கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் இருக்கிறது. ஆனால், மது, சிகரெட் போன்றவற்றின் விலைகளை அதிகரித்து வழமையாக மேற்கொள்ளப்படும் வரி வருமானங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் அத்தியாவசிய சேவைகளில் கட்டணங்களை வெகுவாக அதிகரிப்பது, கட்டணத்தை அதிகரிக்காவிடின் சேவைகளை இடைநிறுத்தம் செய்வது என்று சர்வாதிகார தோரணையில் ஆட்சியாளர்கள் நடந்துகொள்வது ஏற்புடையதல்ல.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மக்கள் பக்கம் பக்கம் நின்று அவர்கள் சார்பாக பேசும். அதற்காகத்தான் அந்த சுயாதீன ஆணைக்குழு இருக்கிறது. ஆனால், அவர்கள் தனது பக்கம் சார்ந்திருக்க வேண்டும் என்று மக்கள் பிரதிநிதியான மின்சக்தி அமைச்சர் முரண்டுபிடிப்பதன் அர்த்தம் புரியவில்லை. பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை பதவியில் இருந்து அகற்றிவிட்டு வேறொருவரை நியமிப்பதால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? அப்படியின்றி ஆட்சியாளருக்கு வேண்டப்பட்ட ஒருவரை அந்த இடத்திற்கு நியமித்தால் மக்களின் பக்கம் பேசப்போவது யார்?

மின்சக்தி அமைச்சர் கூறும் விடயங்கள் நியாயமானவையாக இருக்கலாம். அவற்றை கேள்விக்குட்படுத்துவது எமது நோக்கமல்ல. ஆனால், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் மின்சக்தி அமைச்சர் பிடிக்கும் சண்டைகளைப் பார்த்தால் அமைச்சரின் பக்கம் இருக்கும் சாதாரணமான, நியாயமான காரணங்களைக் கூட மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதே உண்மை. ரணிலின் அரசாங்கம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்காமல் மக்களின் கழுத்தை இறுக்கும் வேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாயின் அதற்கான விளைவுகளை மக்கள் சக்தி என்ற மகத்தான பலத்தின் முன்னால் மண்டியிடவேண்டிவரும் என்பதை வலியுறுத்தி தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை நீக்குவது என்ற அரசின் முடிவு உண்மையானதும் இறுதியானதுமாக இருக்குமானால் அரசு தவறிழைக்கிறது என்று கூறுவதே சரியானதாக இருக்கும். அரசு இந்த விடயத்தைத் தீவிரமாகப் பரிசீலனை செய்யவேண்டும்.

# குறித்த திகதியில் தேர்தல் நடக்குமா?




# வாக்காளர்கள் எப்படி நடந்து கொள்வது?

**சிவகுமார் திவியா**

நாடு முழுவதுமான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பம் இது.

தேர்தல் களமும் சூடுபிடித்திருக்கின்றது. இவ்வேளையில் வாக்காளர்களும் வேட்பாளர்களும் சுறுசுறுப்பாக செயற்படுகின்றனர்.

நாட்டிலேயே அதிக வேட்பாளர்கள் களமிறங்கிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை சமர்ப்பிக்கும் தினம் கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை முடிவடைந்துள்ளது

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவற்றின் பதவிக்காலம் - மேலதிகமாக ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலத்தை மேலதிகமாக ஒரு வருடத்தினால் மட்டும் நீடிக்கும் அதிகாரம் அதற்குப் பொறுப்பான அமைச்சருக்குள்ளது.

**இலங்கையில் மொத்தமாக 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றுள்,**

**மாநகர மன்றங்களின் எண்ணிக்கை - 24**

**நகர மன்றங்களின் எண்ணிக்கை - 41**

**பிரதேச மன்றங்களின் எண்ணிக்கை - 276**

**மொத்தமாக 8,356**

உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 38,259 கிராமங்களின் மன்றங்களுக்கான நாட்டைக் கட்டியெழுப்பும் மகத்தான பணிக்கு வாக்குரிமையின் மூலம் பங்களிப்பு செய்வதற்கான சந்தர்ப்பமாகவே இத்தேர்தலை நோக்க வேண்டிய தார்மீக கடப்பாடு எமக்கு உண்டு .

நமது தாய்நாட்டில் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நல்லாட்சிக்கான அடித்தளத்தை இடுவதற்கும் இந்நாட்டு மக்களுக்கு கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பமாக நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் குறிப்பிடலாம் என்றால் மிகையாகாது.

தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள போதிலும், தேர்தலை அரசாங்கம் ஒத்திவைக்கும் என்கிற பரவலான பேச்சுகள் அரசியலரங்கில் எழுந்துள்ளன.

இதேவேளை, பொருளாதார நெருக்கடி நிறைந்துள்ள தற்போதைய காலகட்டத்தில் - தேர்தலை நடத்துவது, பாரிய அழிவுக்கு வழிவகுக்கும் எனப் பலராலும் முணுமுணுக்கப்படுகின்றது இந்தத் தேர்தல் திருவிழாவில் பல சுவாரஸ்யமான நிகழ்வுகளும் அரங்கேறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுவினர் தமது வேட்பாளர்களை மேடைகளில் அமர வைத்து தேர்தல் பிரசாரம் செய்வது வாடிக்கையான விடயம். தேர்தல் வந்துவிட்டால் கட்சிகளும் வேட்பாளர்களும் நூதனமான பிரசாரத்தில் ஈடுபடுவது வழக்கம்.

மேடைக்கு வரும் வேட்பாளர்கள், ''மணலைக் கயிறாகத் திரிப்போம், வானத்தை வில்லாக வளைப்போம்'' என்பதுபோல் வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். பின்னர் வாக்குறுதிகளைப் பற்றி வென்றவரும் கவலைப்படுவதில்லை - வாக்களித்தவர்களும் கேள்வி கேட்பதில்லை.

நாட்டில் தற்போதுள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை அதிகம் என்றும், அதனால் அதனை அரைவாசியாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். தற்போது நாடு முழுவதும் 8,690 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

உறுப்பினர்களின் தொகையைக் குறைக்கும் பொருட்டு, தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான வட்டாரங்களின் எண்ணிக்கையையும் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நெருங்கும் காலகட்டத்தில், உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக ஜனாதிபதி எடுத்துள்ள இவ்வாறான முயற்சிகள், தேர்தலை ஒத்தி வைப்பதற்கான தந்திரம் எனவும் பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தற்போது நாட்டின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காரணமாகக் கூறி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். ஆனால், தேர்தலைப் பிற்போடும் உள் நோக்கமும் இதில் உள்ளது என்பதை ஊகிக்கலாம்.

வவுனியா மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இம்மன்றகளுக்கான வேட்பாளர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தல் பிரசாரம் வவுனியாவில் களைகட்டியுள்ளது. இங்கு மொத்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 103. இதில் வவுனியா மாநகர மன்ற உறுப்பினர்கள்-20, வவுனியா வடக்கு பிரதேச மன்றம்-23, வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச மன்றம்-18, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச மன்றம்-26, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச மன்றம்-16 ஆகும்.

ஆனால், இதற்காக போட்டியிட 1597 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்திருந்தார்கள். இவற்றில் 17 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு, 1580 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்கள் களமிறங்கவுள்ளனர். இதேவேளை இம்முறை 126,915 வாக்காளர்கள் வாக்களிக்க பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அதன்படி வவுனியா மாநகர மன்றத்துக்குட்பட்ட வாக்காளர்கள் 20,846 பேரும் வவுனியா வடக்கு பிரதேச மன்றத்துக்குட்பட்ட வாக்காளர்கள் 14,533 பேரும் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச மன்றத்துக்குட்பட்ட வாக்காளர்கள் 18,472 பேரும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச மன்றத்துக்குட்பட்ட வாக்காளர்கள் 61,647 பேரும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச மன்றத்துக்குட்பட்ட வாக்காளர்கள் 11,417 பேரும் இம்முறை வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர் .

இதற்காகத் தேர்தலில் வாக்காளர்கள் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது வாக்காளர்கள் ஒரு சில விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்:

★ ஒருவரின் இருப்பை அழித்துவிட்டு அந்தக் கல்லறையில் ஏறி நின்று போலி வசனம் பேசுகின்றவர்களை நாம் அடையாளம் காணவேண்டும். தோல்வி பயத்தில் மற்றவர்களை வீழ்த்த விமர்சிக்காமல் தாம் செய்ததைப் பற்றியும் இனி செய்யப்போவதைப் பற்றியும் பேசி வெற்றி வாய்ப்பை நிறையவே வளர்க்கலாம்.

★ ஏற்கனவே காணப்படும் வேறுபாடுகளை மீண்டும் ஏற்படுத்தும் விதமாகவோ அல்லது அதிகப்படுத்தும் விதமாகவோ செயற்படுதல் அல்லது சாதி, சமூக, மத அல்லது மொழி அடிப்படையில் பல்வேறு தரப்பினரிடையே வெறுப்புணர்வு அல்லது இறுக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவோ அல்லது அதிகப்படுத்தும் விதமாகவோ வேட்பாளர்கள் செயற்படக் கூடாது.

★ பிற வேட்பாளர்களது குணம் அல்லது நடத்தை குறித்தும் அவரது தேர்தல் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் நோக்கோடும் விமர்சித்தல் கூடாது. வெற்றிபெற தமது சேவை நோக்கைக் கூற வேண்டும்.

★ ஏமாற்று, மோசடிகளில் சம்பந்தப்படாத, முறைகேடான வழிகளில் பொருள் ஈட்டலில் ஈடுபடாத, நன்னடத்தையும் நல்லொழுக்கமும் உடையவர்களுக்கே எமது வாக்குகள் அளிக்கப்பட வேண்டும்.

★ நாட்டை நேசிக்கின்ற, சமூகப்பற்றுள்ள, ஊரைக் கட்டியெழுப்பும் உணர்வும் வல்லமையும் கொண்டவர்களாக எமது வாக்குகளைப் பெறுபவர்கள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ பதவிகளைப் பெறுவதற்கும் வருமானம் ஈட்டுவதற்குமான வழியாகவும் அரசியலைக் கருதாமல் அதனை ஓர் உயர் சமூகப் பணியாகக் கருதி செயற்படுபவர்களாக எமது தெரிவுக்குரியவர்கள் அமைதல் வேண்டும்.

★ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குழப்பத்தையோ அல்லது வன்முறையையோ ஏற்படுத்தல் கூடாது.

★ எந்தவொரு வேட்பாளரும் போட்டியிடுவதைத் தடுத்தல், எந்தவொரு வாக்காளரையும் வாக்களிக்குமாறு/ வாக்களிக்காமல் இருக்குமாறு வற்புறுத்தல் அல்லது சக வேட்பாளரை விலகிக் கொள்ளுமாறு வற்புறுத்தல் ஆகிய சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடக்கூடாது.

★ நாட்டுச் சட்டங்களை மீறுகின்ற, வன்முறைகளில் ஈடுபடுகின்ற வேட்பாளர்கள் நிராகரிக்கப்பட வேண்டும்.

★ இன, மதவாதங்களைத் தூண்டும் வகையில் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்போருக்கு வாக்குகள் அளிக்கப்படலாகாது.

★ மாற்று அரசியல் கட்சிகளையும் வேட்பாளர்களையும் தூஷிக்கின்ற, அவமதித்துப் பேசுகின்ற, பண்பாடற்ற வேட்பாளர்களும் எமது தெரிவுக்குரியோர் அல்லர்.


சுருக்கமாகச் சொல்வதாயின், எமது வாக்குகள் ஏக காலத்தில் நல்லவராகவும் வல்லவராகவும் விளங்குகின்ற வேட்பாளர்களுக்கு வழங்கப்படுவதை உத்தரவாதப்படுத்திக் கொள்ளும் கடப்பாடு நம் அனைவருக்கும் உண்டு. சிறந்த முன்னுதாரண புருஷர்களாக அவர்கள் திகழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

# இன்றைய நாளில்..

- **1908 – இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் மகாத்மா காந்தி இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனைக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டார்.**
- **1948 – மகாத்மா காந்தியை நாதுராம் கோட்சே என்ற இந்து மத அடிப்படைவாதி சுட்டுக் கொன்றான்.**
- **1964 – ரேஞ்சர்-6 விண்கலம் ஏவப்பட்டது.**
- **1964 – தென் வியட்நாமில் ஜெனரல் நியூ‌வென் கான் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.**
- **1972 – பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியது.**
- **1976 – தமிழ்நாட்டில் மு.கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஜனாதிபதியின் ஆட்சி கொண்டுவரப்பட்டது.**
- **2003 – பெல்ஜியம் சமப்பால் திருமணத்தை சட்டபூர்வமாக்கியது.**
- **2006 – தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களான (ஒரு பெண் உட்பட) 7 தமிழர்கள் மட்டக்களப்பு, வெலிக்கந்தையில் கடத்தப்பட்டனர். இவர்கள் இறந்து விட்டதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது.**
- **2013 – தென் கொரியா நாரோ-1 என்ற தனது முதலாவது செலுத்து வாகனத்தை விண்ணுக்கு ஏவியது.**

## நக்கல் நமசிவாயம்

**ரோட்டில போனா தெரியாத ஆக்களெல்லாம் புன்னகைச்சுப்போட்டு போறாங்கள்... வேட்பாளர்களா இருப்பாங்கள் போல..!**



# வலி. வடக்கு மக்களின் ஒரு பகுதி காணிகள் சுதந்திர தினத்துக்கு முன் கையளிக்க ஆயத்தம்

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பொதுமக்களின் காணிகளில் ஒரு பகுதியை எதிர்வரும் 3ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் கையளிப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவரைத் தொடர்புகொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி. வடக்கில் சுமார் 2 ஆயிரத்து 300 ஏக்கருக்கு மேற்பட்ட தனியார் காணிகள் பாதுகாப்புத் தரப்பினரிடம் உள்ள நிலையில், அதன் ஒரு பகுதி காணிகளை பாதுகாப்புத் தரப்பு இவ்வாறு கையளிக்கவுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வுக்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலி. வடக்கிலுள்ள தனியார் காணிகளை பகுதி பகுதியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அதன்பின் யாழ். மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் தொடர்பில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் கள விஜயத்திலும் ஈடுபட்டனர்.

இவ்வாறான நிலையில், எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஒரு பகுதி காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வலி. வடக்குப் பகுதியிலுள்ள விவசாயக் காணிகள் மற்றும் பொதுமக்கள் குடியிருப்புக் காணிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் கரிசனையுடன் செயற்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இளவாலை - பெரியவிளான் பகுதியில் கம்பியால் தாக்கி இளைஞன் படுகொலை



இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் கம்பியால் தாக்கப்பட்டு 29 வயதுடைய இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை (26) வீதியில் சென்று கொண்டிருந்தபோது போதையில் வந்த அதே பகுதியை சேர்ந்த இருவர் அவருடன் முரண்பட்டனர். பின்னர் அந்த முரண்பாடு கைகலப்பாக மாறியது.

இதன்போது அவர்கள் இருவரும் சேர்ந்து குறித்த நபரின் தலைமீது கம்பியால் தாக்கினர். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் அயலில் உள்ளவர்கள் மூலம் மீட்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த நிரோஜன் என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

இந்தப் படுகொலை குறித்து இருவர் இளவாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனும் 20 வயதுடைய இளைஞனுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பாதணிகளை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர் கைது

(கெலும் குணதிலக்க)

பிபில நகரில் பாதணி விற்பனை செய்யும் கடையொன்றில் பாதணிகளின் பழைய விலையின் மீது அதிக விலை கொண்ட ஸ்டிக்கர்களை ஒட்டி விற்பனை செய்த கடை உரிமையாளர் ஒருவர் மொனராகலை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் அலுவலக அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

விலை மாற்றம் செய்யப்பட்ட சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சுமார் 30 ஜோடி பாதணிகளை நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். கடை உரிமையாளருக்கு எதிராக பிபில நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



கல்முனை பிராந்தியத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக பாண்டிருப்பு - கல்முனையை இணைக்கும் வண்டு வீதி குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றது. இதனைத் துப்புரவு செய்ய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் எனவும் இல்லையெனில் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடும் எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(நற்பிட்டிமுனை நிருபர்)

# இடைநிறுத்தப்பட்ட 'எழுதாரகை' பயணிகள் படகுச்சேவை

## ஊர்காவற்றுறை – நயினாதீவு மக்கள் பாதிப்பு




2017ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட 'எழுதாரகை' பயணிகள் படகுச்சேவை 2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் ஊர்காவற்றுறை - காரைநகர் - எழுவைதீவு - அனலைதீவு - நயினாதீவு வரையான சேவை இடம்பெறுவதில்லை. இதனால் இப்பயணிகள் படகுச்சேவையை பயன்படுத்தும் பயணிகள் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

இது சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப் பணிப்பாளர் குருஸுடன் காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். இது சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆவன செய்வதாக திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். இச்சேவை எதிர்காலத்தில் காரைநகர் இறங்குதுறையிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் தவிசாளரால் சுட்டிக்காட்டப்பட்டது. 1990ஆம் ஆண்டிற்கு முன்பு காரைநகர் துறைமுகத்திலிருந்து மேற்படி சேவைகள் கிரமமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்வரும் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்திற்கும் காரைநகரிலிருந்து பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டுமென தவிசாளர் பணிப்பாளரிடம் வலியுறுத்தினார். தற்போது இப்பயணிகள் கப்பல் எழுவைதீவு இறங்குதுறையில் தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு-13, ஜெம்பட்டா வீதி, இல-151/155, அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் திருவிழாவை முன்னிட்டு, ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ செ.சிவநேசன் சிவாச்சாரியார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (27) கொடியேற்ற வைபவம் நடைபெற்றது.

(படங்கள் - மொஹமட் நசார்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனிக்கிழமை 2023.01.28 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5014 | ரூ. 19,488,420.00 | F | 2 7 5 1 4 6 |
| கொவிசெத | 3256 | ரூ. 74,701,247.20 | I | 04 06 29 62 |
| ஜாதிக சம்பத | 1469 | ரூ. 13,893,351.20 | கும்பம் | 4 8 9 9 8 4 |
| தன நிதானய | 1044 | ரூ. 80,683,114.00 | B | 02 32 43 48 |
| ராசி சுப பலன் (Handahana) | 323 | ரூ. 2,612,012.20 | விருச்சிகம் (விசேட இலக்கினம்: விருச்சிகம்) | 12 16 40 47 |
| மெகா பவர் | 1362 | ரூ. 296,015,098.00 | S (சுப்பர் இலக்கம் 03) | 41 43 48 49 |

மெகா பவர்: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.01.27 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5013 | ரூ. 18,639,497.00 | T | 6 2 6 0 6 7 |
| கொவிசெத | 3255 | ரூ. 74,305,500.40 | X | 25 40 64 66 |
| ஜாதிக சம்பத | 1468 | ரூ. 13,820,230.80 | கும்பம் | 4 2 2 3 8 6 |
| தன நிதானய | 1043 | ரூ. 80,683,114.00 | V | 27 60 71 81 |
| ராசி சுப பலன் (Handahana) | 322 | ரூ. 2,595,356.00 | கடகம் (விசேட இலக்கினம்: கடகம்) | 38 39 40 48 |
| மெகா பவர் | 1361 | ரூ. 295,652,078.00 | K (சுப்பர் இலக்கம் 17) | 53 59 72 77 |

மெகா பவர்: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# செலான் வங்கி பீ.எல்.சீ.

**(2007ஆம் ஆண்டு கம்பனிகள் சட்ட இலக்கம் 7 இற்கு அமைய PQ 9 என்ற குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)**

1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறிவிப்பது என்னவென்றால் வங்கிகளினால் கடன்களை மீளப் பெறுவதற்கான திருத்தப்பட்ட 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) பிரிவு 08இன் கீழ். செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் **27 ஏப்ரல் 2022** திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

**கிளை : கொச்சிக்கடை**

**கணக்கு இலக்கங்கள் : 0580-01928200-001**

**பினஷா ட்ரேடேர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்** என்ற நிறுவனம் 2007ஆம் ஆண்டு கம்பனிகள் சட்ட இலக்கம் 07இன் கீழ் முறையாக இணைக்கப்பட்டதும், பதிவு இலக்கம்: P.V.19503ஐ கொண்டதும், **நயினாமடமவில்** பதிவு காரியாலயத்தைக் கொண்டதும், **நயினாமடமவைச்** சேர்ந்த **வர்ணகுலசூரிய ஜோன் பிராங்லீன் விராஜ் பெர்னாண்டோ** மற்றும் **விஜயா திஸ்னா அன்ரோநெட்டி கீத்தானி** ஆகிய இருவரும் "**கடப்பாட்டாளர் / அடகுவைத்தவர்**" ஆக உள்ளதுடன், செலான் வங்கி பீ.எல்.சீ. (2007ஆம் ஆண்டு கம்பனிகள் சட்ட இலக்கம் 07இன் கீழ் நிறுவன பதிவு இலக்கம் PQ 9இல் பதிவுசெய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு **டபிள்யூ.ஈ.என்.ஜே.எச்.ஏக்கநாயக்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 14.05.2008 திகதியிடப்பட்ட 181, பிரசித்த நொத்தாரிசு **டபிள்யூ.எஸ்.என்.பெர்னாண்டோவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11.08.2010 திகதியிடப்பட்ட 1018 மற்றும் 19.10.2012 திகதியிடப்பட்ட 1208 ஆகிய இரு இலக்க அடகுமுறிகள், பிரசித்த நொத்தாரிசு **டபிள்யூ.ஈ.என்.ஜே.ஹர்ஷனியினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 27.12.2013 திகதியிடப்பட்ட 628, பிரசித்த நொத்தாரிசு **ஐ.ரி.குணதிலக்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 21.09.2015 திகதியிடப்பட்ட 2756, பிரசித்த நொத்தாரிசு **ஈ.எஸ்.பீ.குணதுங்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 27.04.2017 திகதியிடப்பட்ட ஆகிய இலக்க அடகுமுறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், **12 நவம்பர் 2020** திகதியன்று பிரதான மற்றும் வட்டி என்பன உள்ளடங்கலாக செலான் வங்கி பீ.எல்.சீ. ஸ்தானத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒன்றுசேர்க்கப்பட்ட **ஆறு கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எண்நூற்று முப்பத்தொரு ரூபா நாற்பத்து ஒன்பது சதம் (ரூ. 6,67,26,831.49)** கொண்ட பணத்தொகைக்கான வட்டி குறித்து சொல்லப்பட்ட முறிகளுக்கு அமைய கீழே தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு அமைவான வாய்ப்பு நலன்கள் அத்துடன் செலான் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் திருத்தப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்துடனான ஆதன அட்டவணைகளில் மேலதிகமாக முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள், வளவுகளும் **181, 1018, 1208, 628, 2756, 62, 2755 மற்றும் 63** ஆகிய சொல்லப்பட்ட அடகுமுறி இலக்கங்கள் மூலம் செலான் வங்கி பீ.எல்.சி. ஸ்தானத்திற்கு ஈடு வைக்கப்பட்டதுமான சொல்லப்பட்ட **ஆறு கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எண்நூற்று முப்பத்தொரு ரூபா நாற்பத்து ஒன்பது சதம் (ரூ. 6,67,26,831.49)** கொண்ட பணத்தொகை **13 நவம்பர் 2020** திகதி முதல் முழுத்தொகையினையும் பெறும் வகையிலான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13இன் கீழ் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடு சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தாலும், அவற்றைக் கழித்து) முழுத் தொகையினையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் **திருமதி சந்திமா கமகேயினால்** பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

(a) **குறுகிய கால தவணை கடன் வசதி** வாய்ப்பு தொடர்பான **மூன்று கோடியே ஏழு இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து இருநூற்று ஐம்பத்து ஏழு ரூபா பத்தொன்பது சதம்** (ரூ. 3,07,91,257.19) அத்துடன், **இரண்டு கோடியே எண்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நானூற்று பதினெட்டு ரூபா முப்பத்தைந்து சதம்** (ரூ.2,89,44,418.35) கொண்ட பணத்தொகைக்கான **பதினாறு சதவீதம்** (16%) கொண்ட வருடாந்தர வட்டி **13 நவம்பர் 2020** முதல்.

(b) **சுழற்சி இறக்குமதி கடன்** வசதி வாய்ப்பு தொடர்பான **மூன்று கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து முப்பத்தந்தையாயிரத்து ஐந்நூற்று எழுபத்து நான்கு ரூபா முப்பது சதம்** (ரூ. 3,59,35,574.30) அத்துடன், **மூன்று கோடியே நாற்பத்தொரு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து நானூற்று முப்பத்தாறு ரூபா எழுபத்திரண்டு சதம்** (ரூ.3,41,82,436.72) கொண்ட பணத்தொகைக்கான **பதினாறு சதவீதம்** (16%) கொண்ட வருடாந்தர வட்டி **13 நவம்பர் 2020** முதல்.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது ஆதன அட்டவணை**

வடமேல் மாகாணம், மாரவில பதிவு பிரிவு, புத்தளம் மாவட்டத்தில் உள்ள பிற்றிகல கோரள தெற்கின் கம்மல்பற்றுவில் உள்ள கம்மல்பற்றுவ உப காரியாலயத்தில் உள்ள வென்னப்புவ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்கு உட்பட்ட நயினாமடம கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட **நயினாமடம கிராமத்தில்** உள்ள "**கொஸ்கஹாவத்த மறுபெயர் மடன்கஹாவத்த**" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் **எம்.ஜி.எஸ்.சமரதுங்கவினால்** தயாரிக்கப்பட்ட **18 ஏப்ரல் 2017** திகதியிடப்பட்ட **வரைபட இலக்கம் 7383**இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 1** என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் **வடக்கு** கே.ரி.ஜுவான் ரூவுஸ் பெரேராவின் காணி **கிழக்கு** கே.கே.டோன் ஜோய் நிஹால் கிரிஸ்டியின் காணி **தெற்கு** தனியார் வீதி **மேற்கு** சிலாபத்தில் இருந்து கொழும்பு செல்லும் வீதி (வீ.அ.அ.ச.) அத்துடன், சொல்லப்பட்ட **வரைபட இலக்கம் 7383** இற்கு அமைவான **ஒரு ரூட் மற்றும் முப்பத்து நான்கு தசம் ஏழு பூஜ்ஜியம் பேர்ச்** (ஏ0:ரூ1:பே34.70) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடன் எல்லாம்.

பிரசித்த நொத்தாரிசு **டபிள்யூ.ஈ.என்.ஜே.எச்.ஏக்கநாயக்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட **14.05.2008 திகதியிடப்பட்ட அடகுமுறி இலக்கம் 181**, பிரசித்த நொத்தாரிசு **டபிள்யூ.எஸ்.என்.பெர்னாண்டோவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11.08.2010 திகதியிடப்பட்ட 1018 மற்றும் 19.10.2012 திகதியிடப்பட்ட 1208 ஆகிய இரு முறிகள், பிரசித்த நொத்தாரிசு **டபிள்யூ.ஈ.என்.ஜே.ஹர்ஷனியினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 27.12.2013 திகதியிடப்பட்ட 628, பிரசித்த நொத்தாரிசு **ஐ.ரி.குணதிலக்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 21.09.2015 திகதியிடப்பட்ட 2756, பிரசித்த நொத்தாரிசு **ஈ.எஸ்.பீ.குணதுங்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 27.04.2017 திகதியிடப்பட்ட ஆகிய அடகுமுறிகளின் கீழ் ஆதனம் அடகுவைக்கப்பட்டது

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாவது ஆதன அட்டவணை**

வடமேல் மாகாணம், மாரவில பதிவு பிரிவு, புத்தளம் மாவட்டத்தில் உள்ள பிற்றிகல கோரள தெற்கின் கம்மல்பற்றுவில் உள்ள கம்மல்பற்று உப காரியாலயத்தில் உள்ள வென்னப்புவ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குள் உட்பட்ட ஹனதொட்டுபொல, கிராம சேவகர் பிரிவு 485/A, இல் உள்ள **நயினாமடம கிராமத்திலுள்ள** "**கஹட்டகஹாவத்த**" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் **வை.எம்.ஆர்.யாப்பாவினால்** தயாரிக்கப்பட்ட **20 நவம்பர் 2003** திகதியிடப்பட்ட **வரைபட இலக்கம் 8957**இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 1**, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம்.ஜி.எஸ்.சமரதுங்கவினால் தயாரிக்கப்பட்ட 13 செப்டெம்பர் 2015 அன்று ஒப்புதல் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் **வடக்கு** வீதி **கிழக்கு** உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே.ஏ.ஜி.அமரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 18, 19 ஏப்ரல் 1970 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 561இல் உள்ள காணித்துண்டு 16 **தெற்கு** ஜே.ஈ.பெர்னாண்டோவினால் வாரிசுகள் மற்றும் ஏனையவர்களது காணி **மேற்கு** சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 561இல் உள்ள காணித்துண்டு 18 அத்துடன் **முப்பது பேர்ச்** (ஏ0:ரூ0:பே30) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடன் உள்ள எல்லாம்.

ஆதனம் பிரசித்த நொத்தாரிசு **ஐ.ரி.குணதிலக்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 21.09.2015 **திகதியிடப்பட்ட 2755**, பிரசித்த நொத்தாரிசு **ஈ.எஸ்.பீ.குணதுங்கவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 27.04.2017 **திகதியிடப்பட்ட 63** ஆகிய அடகுமுறிகளின் கீழ் ஆதனம் அடகுவைக்கப்பட்டது

**சபையின் இயக்குனர் கட்டளைக்கு அமைய**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

# ஹட்டன் கல்வி வலய புலமைப்பரிசில் பரீட்சையில் 351 மாணவர்கள் சித்தி

(கினிகத்தேனை செய்தியாளர்)

2022ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்து தற்போது வெளியிடப்பட்டுள்ள புலமைப்பரிசில் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஹட்டன் கல்வி வலயத்தில் 351 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக ஆரம்ப கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் நல்லு சிவகுமாரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கோட்டம் ஒன்றில் 184 மாணவர்களும், கோட்டம் 11இல் 69 மாணவர்களும், கோட்டம் 111இல் 98 மாணவர்களுமாக மொத்தமாக 351 மாணவர்கள் சித்தியடைந்ததாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2022ஆம் ஆண்டில் நமது நாட்டில் நாம் எதிர்நோக்கிய பிரச்சினைகள் ஏராளம். அதன் பிரதிபலிப்புகளை இன்றும் நாம் அனுபவிக்கின்றோம். அத்தகைய கடுமையான சூழ்நிலையிலும் தங்களின் அர்ப்பணிப்புமிக்க கல்விச் சேவையை நேரடியாக நான் பார்வையிடுகின்றேன். உங்கள் சேவைக்கான பலன் கிடைத்திருக்கின்றது.

அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு சென்று பணியாற்றிய கடவுளுக்கு நிகரான சேவையாளர்களை இவ்விடத்தில் நினைவு கூறுகின்றேன். அவர்களுக்கும் இந்த வெற்றிக்காக முன்னின்று உழைத்த உழைப்பிற்கு பங்காற்றிய யாவருக்கும் நிறைவான செழுமையான வாழ்வு அமைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஹட்டன் கல்வி வலயத்தின் சார்பில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுகளும். புதிய ஆண்டில் புதிய வழிகாட்டலில் இன்னும் சிறப்பாக பணியாற்றுவோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராகலை பகுதியில் சுகாதாரப் பரிசோதனை



(ஆ.ரமேஸ்)

இராகலை நகரம் பொது சுகாதாரப் பரிசோதக அதிகாரிகளினால் நேற்றுமுன்தினம் (28) சனிக்கிழமை இராகலை, உடப்புஸ்ஸலாவ, எமஸ்ட், மெதவத்த ஆகிய நகரங்கள் விசேடமாக சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இராகலை உள்ளிட்ட மேற்படி நகரங்களில் உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள், மலிகைக் கடைகள், கோழி மற்றும் மீன் இறைச்சி விற்பனை நிலையங்கள் அத்துடன் அங்காடி விற்பனை நிலையங்கள் எனப் பல சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இராகலை பொது சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்ட பொது சுகாதாரப் பரிசோதக அதிகாரிகளின் ஏற்பாட்டில் கொட்டகலை, லிந்துலை, வலப்பனை, பிரதேச பொது சுகாதாரப் பிரிவு அதிகாரிகளால் இந்த பரிசோதனை நடவடிக்கை குழுவாக களமிறங்கி மேற்கொள்ளப்பட்டது.

அதேநேரத்தில் இந்த விசேட பரிசோதனை நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ள விடயம் அறிந்த பல வர்த்தகர்கள் தங்களது கடைகளை மூடிவிட்டு பரிசோதனை நடவடிக்கை முடிந்த பின்னர் வழமையான வியாபாரத்தை முன்னெடுத்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும், சுகாதாரப் பரிசோதனையை மேற்கொண்ட அதிகாரிகள் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்ய தங்களது கடைகளில் வைத்திருந்த பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை கைப்பற்றி அவர்கள் மீது வழக்கு தொடர நடவடிக்கை எடுத்ததுடன், காலாவதியான பொருட்களை அழிக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.



# நீர்த்தேக்கத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு



(தலவாக்கலை செய்தியாளர்)

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் (28) மாலை மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புள பத்தனை மவுன்ட்வேர்னன் தோட்டத்தில் வசித்து வந்த சுப்ரமணியம் சதீஸ்ராஜா (வயது 28) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தற்கொலை செய்துகொள்ளும் நோக்கில் நீர்த்தேக்கத்தில் குதித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டதுடன், உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. இந்த இளைஞன் எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என்பது குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்திய - இலங்கை ரோட்டரி கழகங்கள் நட்பு ரீதியான ஒப்பந்தம்





இந்தியாவின் கோயம்புத்தூர் நகரில் அமைந்துள்ள மேற்கு ரத்தன் கழகமும் இலங்கை ஆட்டம் டிக்கோர் ரோட்டரி கழகமும் நட்பு கழகங்களாக கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கோயம்புத்தூரில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது, கோயம்புத்தூர் மேற்கு ரோட்டரி கழகத்தின் தலைவர் ஜம்பு குமார் தலைமையில் இடம்பெற்றதோடு இலங்கை ஹட்டன் டிக்கோயா ரோட்டரி கழகம் சார்பாக அதன் தலைவர் சுப்பிரமணியம் தியாகு கலந்து கொண்டார். இவரோடு 2023/24 ஆம் ஆண்டுக்கான தலைவர் சோமசுந்தரம் கலந்து கொண்டதுடன் கோயம்புத்தூர் மேற்கு ரோட்டரி கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக எதிர்காலத்தில் இரண்டு கழகங்களும் இணைந்து சமூக ரீதியான செயல்பாடுகளை முன்னெடுப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புசல்லாவை சரஸ்வதியில் 11 மாணவர்கள் சித்தி

(எஸ்.கணேசன்)

கண்டி, கம்பளை கல்வி வலயத்துக்குட்பட்ட புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியிலிருந்து 2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 94 மாணவர்களுள் 11 பேர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். அத்துடன், 59 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மாணவர்கள் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு எல்லா வழிகளிலும் பக்க பலமாக இருந்த கல்லூரியின் அதிபர் ஜி. லோகேஸ்வரனுக்கும், மாணவர்களை உரிய வகையில் தயார்படுத்தி, நெறிப்படுத்திய வகுப்பாசிரியர்களான எஸ். அரியரட்ணம், திருமதி ஏ. கனிமொழி ஆகியோருக்கும் பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ். ரவிச்சந்திரன் உட்பட அனைத்து ஆசிரியர்களுக்கும் பெற்றோர், பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்டோர் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

அதேபோல, பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்கு 91 சதவீத சித்தியை பெற்றுத்தந்த அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறுபேறு பெற்றுக்கொண்ட மாணவர்களின் விபரம் வருமாறு, ஆர். பிரஷாயுதன் - 161, ஏ. ஜனுர்ஷிகா - 160, எம். தாரிக்கா – 156, பி. மெலிஷா – 155, ஜே. விதுர்ஷன் - 154, யூ. கீதன் - 153, எஸ். ஹோம்ஷிகா – 149, எஸ். விதுர்ஷன் - 149, ஜி. நேஹன் - 147, எம். கியோசி – 147, ஆர். ஷாகித்யன் - 145.

# யாழில் ஜனவரி மாதம் 300 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

## வைத்தியர் யமுனாநந்தா தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

இலங்கையில் இந்த வருடம் ஜனவரி மாதம் கண்டறியப்பட்ட மொத்த டெங்கு நோயாளிகளின் தொகையானது 2021ஆம் ஆண்டு இலங்கையில் ஆண்டு முழுவதும் கண்டறியப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கைக்கு சமனாக காணப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் சி. யமுனாநந்தா தெரிவித்தார்.

வடக்கில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது. அதேபோல யாழ். போதனா வைத்தியசாலையிலும் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கண்டறியப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 300 ஆக காணப்படுகின்றது. இதில் 33 சதவீதமானவர்கள் சிறுவர்களாக காணப்படுகின்றார்கள்.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 200 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். கடந்த வருட ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் 50% அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே, டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை செய்யாவிட்டால் இந்த வருடம் சுமார் 2000 டெங்கு நோயாளர்களை வைத்தியசாலையில்



சேர்க்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு மிகவும் முக்கியமாகும். குறிப்பாக, டெங்கு நோய் அதிகம் பாதிப்பது சிறுவர்களையே. எனவே சிறுவர்களின் பெற்றோர்கள் இதில் கவனமெடுக்க வேண்டும்.

டெங்கு நோயானது சிறுவர்களை குறிப்பாக 15 வயதுக்குட்பட்டவர்களை கடுமையாக பாதிக்கின்றது. அடுத்ததாக வயது முதிர்ந்தவர்கள், உடற்பருமன் உடையவர்கள், நீரிழிவு நோயாளர்கள், ஆஸ்மா நோயாளர்களைப் பாதிக்கின்றது.

டெங்குநோய் நுளம்பு மூலம் தொற்றுகின்றது. 90 வீதமான மக்கள் வீதிகளில் கழிவுகளை வீசும்போது அதில் நுளம்பு பெருகுவதனால் டெங்கு நுளம்பு அதிகம் பரவுகின்றது.

கடந்த வருடம் சுமார் ஐந்து பேர் டெங்கு நோயினால் யாழ்ப்பாணத்தில் இறந்துள்ளார்கள். எனவே, இவ்வருடம் இவ்வாறான இறப்புகள் ஏற்படாதிருப்பதற்கு நமக்கு முதல் தேவை டெங்கு பெருகும் இடங்களை அகற்றுவதாகும். அதாவது சுத்தப்படுத்தல் வேண்டும்.

அண்மைக்காலங்களில் டெங்கு நோய் பெருகும் இடங்கள், சுற்றுச்சூழல், சுகாதாரம் மிக முக்கியமாகும். அவற்றை டெங்கு விழிப்புணர்வு வாரம் மூலம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மூலம் செய்கின்றோம். புதிது புதிதாக கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. அவை அரைகுறையாக இருக்கும்போது அதில் டெங்கு நுளம்பு பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

யாழ். நகருக்கு அப்பால் புதிய நகரங்கள் போல் கடைகள் கட்டப்படுகின்றன. தோட்டக் காணிகளில் வீடுகள், மண்டபங்கள், கடைகள் கட்டும்போது அங்கு நுளம்பு பரவுவதற்குரிய சூழல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே டெங்கு நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள சுற்றுச்சூழலை சுத்தமாக பேணுவதனால் டெங்கு நுளம்பில் இருந்து எங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் - என்றார்.

# தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு சமூக வலைத்தளம் ஊடாக கொலை அச்சுறுத்தல்

## கபே அமைப்புக்கு முறைப்பாடு



இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் எம்.எம்.மொஹமட்டுக்கு சமூக வலைத்தளமான வட்ஸ்அப் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்திற்கு (கபே) முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று(29) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீம் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு வட்ஸ்அப் ஊடாக தொடர்ச்சியாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகாவிடில் அவரை கழுத்தறுத்து கொலை செய்யப்போவதாக அச்சுறுத்துவதாகவும் தெரிவித்து இன்று (நேற்று) கபே அமைப்புக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# ஊடகவியலாளரின் வீடு முற்றுகை

நீதிமன்றில் வழக்கு நிலுவையிலுள்ள நிலையில் ஊடகவியலாளருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அவரது வீடு கடந்த வெள்ளிக்கிழமை முற்றுகையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் கட்டுடை அரசடி வீதியிலுள்ள ஊடகவியலாளர் எஸ்.ஆர்.கரனின் வீடே இவ்வாறு முற்றுகையிடப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த ஊடகவியலாளரின் வீட்டுக்கு முன்புள்ள வயல் காணியில் எல்லைக்காக போடப்பட்டிருந்த சீமெந்து தூண் உடைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவில் பணியாற்றும் நபராலேயே இவ்வாறு குறித்த தூண் உடைக்கப்பட்டுள்ளதாக குறித்த ஊடகவியலாளர் சுட்டிக் காட்டுகின்றார்.

குறித்த நபருக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை மாலை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பணிநிமித்தம் வெளியில் சென்று வீட்டுக்குத் திரும்பிய ஊடகவியலாளரை பின்தொடர்ந்து வந்த குறித்த நபரும் அவரது உறவினர் ஒருவரும் தூணை உடைத்து வீழ்த்தியதுடன், பெண்கள் உட்பட ஆறுக்கும் மேற்பட்ட நபர்கள் ஊடகவியலாளரின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் கரன், தொலைபேசி வாயிலாக ஊடக நண்பர்களுக்கும், பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியதை அறிந்துகொண்ட குறித்த நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இதேவேளை, வயலில் போடப்பட்டிருந்த தூண் உடைக்கப்பட்ட காட்சி சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளது.

கோவிலுக்கு செல்லும் மக்கள் பயன்படுத்தும் பாதையை அரசியல் செல்வாக்குடைய குறித்த நபர் அபகரித்து வருவது தொடர்பில் இணக்க சபையிலும் வழக்கு நிலுவையில் உள்ளது.

மக்கள் பயன்படுத்தும் பாதையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவு ஊழியர் தொடர்பிலும், அவரது அநாகரிகமான செயற்பாடுகள் தொடர்பிலும் ஆணையாளரிடம் வாய்மொழி மூலமாக ஊடகவியலாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தூண் உடைக்கப்பட்டது தொடர்பான காணொளியுடன் ஆணையாளரிடம் எழுத்து மூலமான முறைப்பாடு செய்யவுள்ளதாக குறித்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

# யாழில் மூன்று தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை சிறியளவிலான மூன்று தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்தார்.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டு தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு தேர்தல் வேலைகள் இடம்பெற்றுவரும் நிலையில், குறித்த தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக நடவடிக்கைகளுக்காக அவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# தாய்ப்பால் புரைக்கேறி குழந்தை உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழில் தாய்ப்பால் புரைக்கேறி 30 நாட்களேயான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

புத்தூர் நவக்கிரி, மாதா கோவிலடியைச் சேர்ந்த ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, தாயிடம் பாலருந்தியபோது திடீரென புரைக்கேறியது. இதனையடுத்து அச்சுவேலி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோது குழந்தை உயிரிழந்துள்ளது. அதனையடுத்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உடற்கூறு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் 31ஆம் நாள் நிகழ்வுகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவந்த வேளையில் குழந்தையின் இறப்புச் சம்பவம் பிரதேச மக்கள் மற்றும் குடும்பத்தினரிடையே பாரிய சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

# இரசாயன உரங்களுக்கு ரூ.16,000 மில்லியன் ஒதுக்கீடு

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

2022 - 2023 பெரும்போகத்துக்குத் தேவையான இரசாயன உரங்களைக் கொள்வனவுசெய்வதற்கு அரசாங்கம் 16,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும், இரசாயன உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையில் முன்வைத்த பிரேரணைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பூரண ஆதரவை தெரிவித்தார்.

விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



2022/2023 பெரும் போகத்தில் இரசாயன உரங்களை விநியோகிப்பதற்காக நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மாவட்ட குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட செயலாளர் தலைமையிலான இந்தக் குழு விவசாயிகளின் பிரதிநிதிகளுக்கும் பொறுப்புக் கூறப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# மீண்டுமொரு ஏமாற்றத்தில் சிக்கிக்கொள்ளாதீர்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை

ஒரு முறை அலைகளாலும் பொய்களாலும் ஏமாந்து இந்நாடு வங்குரோத்தானது. மீண்டும் ஏமாற்று காட்டி நாட்டை வங்குரோத்து செய்யும் அடுத்தகட்ட நடவடிக்கையை சிலர் ஆரம்பித்துள்ளனர். இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு டொலர்கள் இன்றியமையாதது. அதற்கான விசேட திட்டமொன்று தேவைப்படுகின்றது - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பலாந்தோட்டையில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.





அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி இல்லை, வேலை செய்யமுடியாது, நாடு வங்குரோத்தாகிவிட்டது. அரசாங்கம் சாக்குப்போக்கு தேடும் வேளையில், ஐக்கிய மக்கள் சக்தி சம்பிரதாய எதிர்க்கட்சியின் வகிபாகத்திலிருந்து விடுபட்டு நாட்டுக்குப் பெறுமானத்தைச் சேர்த்தது என்றார்.

சிலர் 74 வருட வரலாற்றைக் குறை கூறி குற்றஞ்சுமத்தி வருகின்றபோதிலும், அவ்வாறு கூறும் தரப்பினரும் இந்நாட்டு அரசாங்கங்களில் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் கடமையாற்றியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் நினைவு கூர்ந்தார்.




### Planter Trainees

**Company: Hayleys Group**

*Email: hr@ttel.hayleys.com*

### Resident Manager (Hotel)/Legal cum Admin Officer

**Company: Orion Development (PVT) Ltd**

Address: General Manager, Orion Development (PVT) Ltd, No: 752, Dr.Danister De Silva Mawatha, Colombo 09.

*Email: Asstacc1@orioncity.lk*

### Accountant

**Company: Solico International Pvt Ltd.**

*Email: secretary@solicolk.com*

### Ticketing Executives/Accounts Clerk/Clerk/ Office Cleaner

**Company: Ajma Travels Pvt Ltd.**

Address: No 22, Dias Place, Gunasinghepura, Colombo 12.

### Marketing Executive/Office Co-ordinator/ Graphic Designer

**Contact: 011 2883875/0777 756976**

*Email: hr4@konnectiong.biz*

### Chief Operating Officer

**Company: Shipex Lanka Holdings Pvt Ltd**

Qualifications: Minimum 05 years of experience, Age between 30-45 years, A completed HND of Degree in Management or in another relevant field, Excellent communication skills.

*Apply:: md@shipexlanka.com*

# யாழில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்போர் குறித்து தகவல் வழங்கினால் சட்ட நடவடிக்கை

## வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரட்ண அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் வன்முறையாளர்கள் தொடர்பில் தகவல் வழங்கினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரட்ண அறிவித்துள்ளார்.

மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கியவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்துத் துன்புறுத்திய கும்பல் தொடர்பில் வெளியாகிய காணொளிகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டமையை சுட்டிக்காட்டிய அவர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண மேலும் தெரிவித்ததாவது;

மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கியவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அவர்களை அழைத்துவந்து மருதனார்மடம் தோட்டக் காணிக்குள் வைத்து அடித்துத் துன்புறுத்தும் கும்பல் தொடர்பில் கடந்த சில நாட்களாக சமூக ஊடகங்களில் காணொளிகள் வெளியாகின.

அவற்றின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து பொதுமக்களை சட்டத்துக்குப் புறம்பாக அடித்து



துன்புறுத்தும் நபர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் பிரிவுகளுக்கு உத்தரவிட்டேன்.

அதனடிப்படையில் முதன்மை சந்தேக நபர் உட்பட ஐந்து பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் பெப்ரவரி 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுபோது ஏதாவது ஒருவகையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். முறைப்பாடு வழங்குவதில் சிக்கல் இருந்தால் நேரடியாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்துக்கு தகவல்களை வழங்கினாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள் மீது மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்க நான் தயாராக உள்ளேன் – என்றார்



கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலையான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகேயை அனைத்து வழக்குகளிலிருந்தும் முற்றாக விடுதலை செய்யக்கோரியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றுமுழுதாக நீக்கக் கோரியும் பல்கலைக்கழக மாணவர்களால் கையெழுத்து சேகரிப்பு நேற்று (29) யாழ். மத்திய பஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது.

# ராஜபக்ஷக்களையும் ஜனாதிபதி ரணிலையும் வீட்டுக்கு அனுப்பவே உள்ளூராட்சித் தேர்தல்

## ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் இப்திகார் ஜெமீல்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

நாட்டை குட்டிச்சுவராக்கி, அதலபாதாளத்தில் தள்ளிய ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட மொட்டு கட்சிக்காரர்களையும் அவர்களது அடிவருடியாகச் செயற்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் வீட்டுக்கு அனுப்ப முழுநாட்டு மக்களுமே அணிதிரண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்திலேயே ஆட்சி மாற்றத்திற்கான முதல் வெடிகுண்டே இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலாகும். இதில் ஐக்கிய மக்கள் சக்தி அமோக ஆதரவுடன் பேருவளை நகர சபையை வென்றெடுக்கும் - என்று முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் பேருவளை தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளருமான இப்திகார் ஜெமீல் கூறினார்.

பேருவளை நகர சபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் கலந்துகொண்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்று இப்திகார் ஜெமீலின் வீட்டில் அண்மையில் (27) நடைபெற்றது. அதில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பேருவளை நகர சபையை வென்றெடுக்க என்னை முதன்மை வேட்பாளராகக்கொண்டு முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் பட்டய பொறியியலாளருமான எம்.எம்.அம்ஜத் மற்றும் பேருவளை நகர சபையின் முன்னாள் எதிரணி தலைவர் ஹஸன் பாஸி உள்ளிட்ட மிகவும் கண்ணியமான வேட்பாளர் குழுவொன்று களமிறக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி போட்டியிடும் இந்தத் தேர்தலில் ஊழல்,மோசடிகளில் ஈடுபடாத நல்ல கனவான் அரசியல்வாதிகளையே களமிறக்குவதாக எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச ஆரம்பத்திலிருந்தே கூறி வந்துள்ளார். அதற்கிணங்க சகல சபைகளிலும் நல்ல பண்புள்ள துறை சார்ந்த நிபுணத்துவமும் சமூக நல்ல மனப்பான்மையும் கொண்டோரே வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அதில் எமது பேருவளை நகர சபை வேட்பாளர்களும் விதிவிலக்கல்ல.

கொழும்பு மாநகர சபையைத் தவிர இதர உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேயர், நகர பிதா, தவிசாளர் என்று முன்கூட்டியே முன்மொழியப்படுவதில்லை என்பதையும் வேட்பாளர் தெரிவின்போது எமது தலைவர் கருத்து வெளியிட்டுள்ளதையும் இவ்விடத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

# அங்குனுகொலபெலஸ்ஸ காட்டுப் பகுதியில் கஞ்சா சேனைகள் முற்றுகை – இருவர் கைது

(கெலும் குணதிலக்க)

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அங்குனுகொலபெலஸ்ஸ பாதுகாப்பு வனப் பகுதியில் நேற்று முன்தினம் (28) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 4 கஞ்சா சேனைகளை முற்றுகையிட்டதுடன், உரிமையாளர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சூரியவெவ தனமல்வில பகுதியைச் சேர்ந்த 48 வயதான ஒருவரும், அதே பகுதியைச் சேர்ந்த 42 வயதான ஒருவரும் கஞ்சா செடிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா தோட்டங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் இருவரையும் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தனமல்வில தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் டி.எம்.பி.பண்டார உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.







கொழும்பு கிருலப்பனை கற்குழு வீதி அருள்மிகு ஸ்ரீ நாக முத்துமாரியம்மன் ஆலய நூதன பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் நிகழ்த்திய கும்பாபிஷேக கரணவாய் சிவஸ்ரீ ராமநாத திருச்செந்தில்நாத சிவாச்சாரியாருக்கு ஆலய நிர்வாக சபையினர் தேவி பூஜா துரந்தரர் என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கி கௌரவித்தனர். அருகில் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் மற்றும் பக்தர்களையும் ஆலய நிர்வாகத்தினரையும் படத்தில் காணலாம்.

# ஒரு இலட்சத்து 44ஆயிரம் பெறுமதியான தகரங்களை திருடிய சந்தேகநபர் கைது

(கெலும் குணதிலக்க)

அத்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலுதியஎல்ல பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் கொட்டகை ஒன்றில் திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த தகரத் தொகுதி அத்திமலை பொலிஸாரால் நேற்று முன்தினம் (28) கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் தகரங்கள் சுமார் ஒரு இலட்சத்து 44 ஆயிரம் ரூபா பெறுமதியுடையவையாகும்.

இந்த தகரத் தொகுதியை திருடியதாக சந்தேகிக்கப்படும் வெண்டிகும்புர வெஹெரகல பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், சந்தேகநபரை சியாம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 2022ஆம் ஆண்டின் விமானப்படையின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான கௌரவிப்பு வைபவம்





2022ஆம் ஆண்டின் விமானப்படையின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான கௌரவிப்பு வைபவம் அண்மையில் இலங்கை விமானப்படை தலைமையகத்தில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நடைபெற்றுவரும் 12ஆவது பாதுகாப்பு சேவைகள் விளையாட்டுப் போட்டிகள், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்ட விமானப்படை விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு இதன்போது பாராட்டுகளும் வெற்றிக்கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சர்வதேச போட்டிகளில் இலங்கை விமானப்படை கராத்தே அணியினர் 6ஆவது தெற்காசிய கராத்தே சம்பியன்ஷிப் 2022இல் கலந்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்று நாட்டுக்கு பெருமை சேர்த்தமையும் விசேட அம்சமாகும். இந்த நிகழ்வில் இலங்கை விமானப்படை பணிப்பாளர்கள் மற்றும் விளையாட்டுப் பிரிவு தலைவர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், விளையாட்டு வீர, வீராங்கனைகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மகளிர் கிண்ண உதைபந்தாட்ட பந்து அறிமுகம்



(ரமணி)

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் ஜூலை மாதம் நடைபெறும் மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்ட பந்து சிட்னியில் அறிமுகப்படுத்தப்பட்டது. OCEAUNZ என்று பந்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது. இது அவுஸ்திரேலியா, நியூசிலாந்தின் கலாசாரங்களை வெளிப்படுத்துகிறது.

"OCEAUNZஇன் வடிவமைப்பு இரண்டு நாடுகளின் தனித்துவமான இயற்கை நிலப்பரப்புகளால் ஈர்க்கப்பட்டுள்ளது, Aotearoa நியூசிலாந்தின் பரந்த மலைகள் மற்றும் இந்தியப் பெருங்கடலுடனான அவுஸ்திரேலியாவின் தொடர்பைக் கொண்டது.

பழங்குடியின கலைஞர் செர்னி சுட்டன், மவோரி கலைஞரான பியோனா கோலிஸ் ஆகியோர் பந்தை வடிவமைத்ததாக பீபா அறிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு உலகக்கிண்ண பந்தைப்போலவே இணைக்கப்பட்ட தொழில் நுட்பத்தையும் OCEAUNZ கொண்டுள்ளது. இது போட்டி அதிகாரிகளுக்கு உடனடித் தரவை வழங்குகிறது.

2023 மகளிர் உலகக் கிண்ணப் போட்டி ஜூலை 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. தொடக்க ஆட்டத்தில் நியூசிலாந்து நோர்வேயை எதிர்கொள்கிறது, ஓகஸ்ட் 20ஆம் திகதி சிட்னியில் இறுதிப் போட்டி நடைபெறும்.

# ஆஸி. ஓபன் டென்னிஸ் - 2023

## முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சபலெங்கா



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த சபலெங்கா சம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட்ஸ்லாம் தொடரில் அவர் பட்டம் வெல்வது இதுவே முதன் முறையாகும்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்ற இந்தத் தொடரின் 13ஆவது நாளான நேற்று முன்தினம் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் 5ஆம் நிலை வீராங்கனையான பெலாரசின் சபலெங்கா, 22ஆம் நிலை வீராங்கனையும், விம்பிள்டன் சம்பியனுமான கஜகஸ் தானின் எலெனா ரைபகினாவை எதிர்த்து விளையாடினார். இதில் முதல் செட்டை சபலெங்கா 4-6 என இழந்தார். எனினும், அடுத்த இரு செட்களையும் துடிப்புடன் விளையாடி 6-3, 6-4 என கைப்பற்றினார்.

கிராண்ட்ஸ்லாம் தொடரில் சபலெங்கா சம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதன்முறையாகும். மேலும் அஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வெல்லும் 2ஆவது பெல்லாரஸ் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றுள்ளார் சபலெங்கா.

இதற்கு முன்னர் அந்நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அசரங்கா 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் பட்டம் வென்றிருந்தார்.

அவுஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்றுள்ள சபலெங்கா, சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தை பெறவுள்ளார். அதேவேளை, ரைபகினா முதல் 10 இடங்களுக்குள் முன்னேற்றம் காண்பார்.

# இலங்கை செஸ் சம்மேளன சம்பியன்ஷிப் போட்டியில்

## சாய்ந்தமருது சபிலுல் லமாஹ் சம்பியன்




தேசிய இளைஞர் சதுரங்கப் போட்டியில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஹிலால் வித்தியாலய மாணவி சபிலுல் லமாஹ் 08 வயது பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு சம்பியனானார்.

இலங்கை செஸ் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கான (ஆண், பெண்) செஸ் சம்பியன்ஷிப் போட்டியானது இம் மாதம் 28, 29 (சனி, ஞாயிறு) திகதிகளில் சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் 08 வயது பிரிவின் கீழ் விளையாடி அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியீட்டி சபிலுல் லமாஹ் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் அடுத்த மாதம் கொழும்பில் நடக்கவிருக்கும் தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் வெற்றிபெறும் வீரர்கள் தேசிய ரீதியில் விளையாடக்கூடிய வாய்ப்பையும், சர்வதேசமட்டத்தில் விளையாடக்கூடிய வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.







75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்புரைக்கமைய "வீட்டினையும் நாட்டினையும் சுத்தமாக்குவோம்" எனும் கருப்பொருளில் கல்முனை சமுர்த்தி வங்கி வலயங்களில் நேற்று (29) சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றன. கடற்கரைப்பகுதி, பாடசாலைகள், மையவாடி மற்றும் பூங்காக்களில் மேற்படி சிரமதானம் செய்யப்பட்டது. இப்பணியில் சமுர்த்தி பயனாளிக் குடும்பங்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் தங்களது பங்களிப்பினை வழங்கியிருந்தனர். (பாறுக் ஷிஹான்)

# அம்பாறை ஊடகவியலாளர்களுக்கான விழிப்பூட்டும் கலந்துரையாடல் நிகழ்வு





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான சமாதானம், நல்லிணக்கம் தொடர்பான விழிப்பூட்டும் கலந்துரையாடல் நிகழ்வு கல்முனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்றது.



சமாதானமும் சமூகப்பணியும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கல்முனை எஸ்.எல்.ஆர். தனியார் விடுதியில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மற்றும் ஊடகத்துறைக்கான பொறுப்பான முதனிலை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது, 'ஊடக தர்மமும் ஊடக ஒழுக்கமும் ஊடகத்துறையின் நல்லிணக்கமும் மீள் ஒழுக்கமும்' எனும் தலைப்பில் விரிவுரையாற்றியதுடன், ஊடகத்துறையானது ஊடக தர்மத்தை முறையாக கடைப்பிடித்தால் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் எட்டப்பட்டிருக்கும். சமூகத்தில் சமாதான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசியல்வாதிகளும் நல்லிணக்கம் பற்றி பேசுவதற்கு முன்வரவேண்டும் என அவர் தெரிவித்தார்.

வரைமுறையற்ற சமாதானத்தை தொடர்ச்சியாக நாட்டில் ஏற்படுத்தல், சமாதானத்திற்கான சமூகநலச் செயற்பாடுகள், குடும்பம் முதல் அரசாங்கம் வரையும் முறையாக நல்லிணக்கம் பேணப்படுதல், நாட்டிலே நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்தல், மக்களின் மனங்களை வெல்லக்கூடிய வகையில் ஊடகங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் மற்றும் ஊடகவியலாளர்களின் திறன்விருத்தி, மனநிலை மாற்றம், ஆளுமை விருத்தி, நல்லிணக்கம் பேணுதல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

சமாதானமும் சமூகப்பணியும் நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் ரீ.தயாபரன், முகாமையாளர் ரீ.இராஜேந்திரன், இணைப்பாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ் மற்றும் ஊடகவியலாளர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மானியம் பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை

(மூதூர் நிருபர்)



திருகோணமலை, தோப்பூர், உல்லைக் குளம் வெளியில் 480 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட பெரும்போக வேளாண்மை அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது. இம்முறை மஞ்சள் நோய்த் தாக்கத்தினால் ஏக்கருக்கு 10-15 மூடைகள் அளவிலேயே விளைச்சல் கிடைத்துள்ளமையால் தாம் இலட்சக்கணக்கில் நஷ்டமடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னரை விட தற்போது எண்ணெய்களின் விலை, பசளை பிரச்சினை, கூலி என அனைத்துக்கும் அதிகளவில் செலவிட்டு வேளாண்மை செய்தும் விளைச்சல் குறைவடைந்து நஷ்டமடைந்துள்ளோம். இதற்கு முன்னர் ஏக்கருக்கு 20-30 மூடைகள் அளவில் விளைச்சல் கிடைத்தது என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மஞ்சள் நோய்த் தாக்கம் வந்தது. இதற்கான உரிய தீர்வை எமக்கு வழங்கவில்லை. விவசாயிகளான நாம் நஷ்டமடைந்து கடனாளியாகியுள்ளோம். இனி விற்பதற்கு எம்மிடம் எதுவும் இல்லை.

எமது மாவட்டத்திலுள்ள மூன்று எம்.பிக்களும் எங்களது பிரச்சினை பற்றி பேசாமல் என்ன செய்கின்றீர்கள். விவசாயத்தை மேம்படுத்துவதாக இருந்தால் பசளை, டீசல் என்பவற்றை அரசாங்கம் மானியமாக வழங்க வேண்டும். தற்போது அறுவடை செய்கின்றோம். விவசாயிகளுக்கு மானியமாக டீசல் தருவோம் என்று அரசாங்கம் சொன்னது ஆனால், அதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

கடந்த முறை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 4 ஆயிரம் ரூபா தருவதாக அரசாங்கத்தால் சொல்லப்பட்டது. அதுவும் கானல்நீராகவே உள்ளது.

அத்தோடு 69 கிலோ நிறையுடைய ஒரு மூடை நெல் 4 ஆயிரம் தொடக்கம் 4ஆயிரத்து 500 ரூபா வரையில் கொள்வனவு செய்யப்படுகின்றது. இம்முறை பெரும்போகத்தில் விளைச்சல் குறைவடைந்து பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவித்திட்டங்களை மேற்கொள்ள முன்வர வேண்டுமென தோப்பூர் - உல்லைக்குளம் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.


# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு அக்கரைப்பற்று விவேகானந்தா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய ராஜவரதன் கதுராஜ் 181 புள்ளிகளைப் பெற்று வலய மட்டத்தில் முதலிடத்தை பெற்று சித்தியடைந்துள்ளார். மேலும், ஆலையடிவேம்பு கோட்டத்தில் 78 மாணவர்களும் திருக்கோவில் கோட்டத்தில் 57 மாணவர்களும் பொத்துவில் கோட்டத்தில் 11 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். திருக்கோவில் கல்வி வலயம் பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாண மட்டத்தில் 3ஆம் நிலையைப் பெற்றுள்ளதுடன், தேசிய ரீதியில் 37ஆவது இடத்தைப் பெற்று முன்னேற்றம் அடைந்துள்ளதாக வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது. (வி.சுகிர்தகுமார்)



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய எம்.ஆர்.எம். ஷைஹான் சாதிர் (162), ஏ.ஆர்.எப்.ஹிபா பானு (149), எம்.ஏ.ஸஹ்ரா (147) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். மேலும், பரீட்சைக்குத் தோற்றிய 22 மாணவர்களில் அதிகமானோர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சாய்ந்தமருது கோட்டமட்ட பாடசாலைகளில் முதலாம் இடத்தைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக அதிபர் எம்.ஐ.நிபாயிஸ் தெரிவித்தார். (கல்முனை நிருபர்)




கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு கந்தளாய் தி/பேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய எம்.ஏ.எப்.அம்னா (146) வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் எச்.எம்.நௌஸாத் தெரிவித்தார். மேலும், ஏ.எச்.ரஹ்மான் (139), எம்.எஸ்.இஸ்ஸத் ஹனான் (135), எஸ்.எப்.சைனப் (118), எம்.எஸ்.எப்.அப்தா (111), எம்.என்.எம்.றிழா (109), எம்.ஏ.எப்.சப்ரா (105), என்.இல்யாஸ் (104), எம்.எஸ்.சியாத் அஹமட் (101), எம்.எம்.உஸ்மான் (92), எம்.எஸ்.எப்.சம்ரா (85) ஆகியோரையும் வாழ்த்துவதாகவும் அதிபர் தெரிவித்தார். (கந்தளாய் நிருபர்)



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அர்/ ரஹீமியா வித்தியாலயத்திலிருந்து 34 மாணவர்கள் தோற்றிய நிலையில், 27 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் (79.4%) பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கு பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றனர். (எஸ்.சினீஸ்கான்)



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்திலிருந்து தோற்றியோரில் அப்துல் கபூர் முஹம்மட் அஹ்னாப் (178) வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை அதிபர் ஏ.ஏ.கபூரின் புதல்வராவார். மேலும், ஏ.ஜி.எம்.அஹனாப் (178), எம்.எச்.வை.எம். அக்மல் ஹம்தி (167), கே.எப்.சப்னம் (162), எம்.எஸ்.எம்.சின்ஹா ரிதா (157), எம்.எச்.இஹ்சான் (148) எம்.என்.எம்.நாஸிப் (142) ஆகியோரும் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தெரிவித்தார்.



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் திருகோணமலை தி/கறுமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய அனஸ் அம்னத் ஹானியா (150), நூஸ்ரத் ஹம்தான் அகமட் (142) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் கே.எம்.எம்.நவாஸ் தெரிவித்தார். (கந்தளாய் நிருபர்)

கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் வெளியான பெறுபேறுகளின்படி, ஓட்டமாவடி சரீப் அலி வித்தியாலயம் ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக அதன் அதிபர் ஏ.சீ.எம்.அஜ்மீர் தெரிவித்தார். (மீராவோடை நிருபர்)

கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தில் 75 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக் தெரிவித்தார். அதனடிப்படையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் 44 மாணவர்களும் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் (ஜீ.எம்.எம்.எஸ்) பாடசாலையில் 19 மாணவர்களும் லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தில் 5 மாணவர்களும், அல்-கமறூன் வித்தியாலயத்தில் 3 மாணவர்களும், றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும், மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம் மற்றும் எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒரு மாணவருமாக மொத்தம் 75 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். (நிந்தவூர் நிருபர்)

# த.தே.கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் ஐக்கியப்பட வேண்டும்! ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழு கோரிக்கை

(கல்லடி நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் அனைத்தும் ஐக்கியப்பட்டு ஒன்று சேருமாறு ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழு (USTAG) வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் உள்ள சகல தமிழ்க் கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐக்கிய அமெரிக்காவில் செயற்படும் ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழுவின் (USTamil Action Group - USTAG) தலைவர் அனன் பொன்னம்பலத்தால் கையொப்பமிடப்பட்டு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எந்த விதிவிலக்குமின்றி தமிழ் அரசியலில் ஒற்றுமை என்பது முற்றிலும் இன்றியமையாததாக இருக்கும். இவ்வேளையில் தலைமை அதற்கு நேர்மாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது என்ற செய்தியால் உலகெங்கிலுமுள்ள புலம்பெயர் தமிழர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து துண்டாடப்பட்ட த.தே.கூட்டமைப்பின் ஐக்கியத்தை மீண்டும் நிறுவ முடியும் என்ற முன்மொழிவு ஓர் ஆபத்தான மற்றும் பொறுப்பற்ற அனுமானமாகும்.

தனித்துச் செல்லும் ஒவ்வொரு தமிழ்க் கட்சியும் தேர்தலுக்குப் பின்பு ஒற்றுமை என்ற நோக்கத்திற்காக பேசுவதற்கு எந்தத் தமிழ்ப் பிரதிநிதித்துவமும் இல்லாத அளவுக்கு அழிவுகரமான முறையில் தமிழ் வாக்குகளைப் பிரித்துவிடும். இதில் மிகவும் வயிற்றெரிச்சலுக்கும் வெட்கப்பட வேண்டியதுமான விடயம் என்னவெனில், தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று இலங்கை பிரதமர் அறிக்கை வெளியிடுவதைப் பார்க்கும்போதும் மேலும் இந்த பிளவுக்கு மத்தியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ்க் கட்சித் தலைவர்களை சந்திப்பதை ஒரு குறியீடாகக் காட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் தமிழ் மக்களாகிய நாம் அனைத்து கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி தற்போதைய துர்ப்பாக்கிய உத்தியை மறுபரிசீலனை செய்யுமாறும் அதற்குப் பதிலாக அனைத்துக் கட்சிகளையும் ஒரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணையுமாறும், இதற்காக ஐக்கிய முன்னணியின் நோக்கத்திற்காகவும் பலத்திற்காகவும் நாம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பாக உள்ளூராட்சி, மாகாணசபை மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களிலும் எமது மக்கள் விரும்புவது இந்த ஒற்றுமையைத்தான். நிரந்தர அரசியல் தீர்வு பற்றி இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் பேசிக் கொண்டிருக்கும் காலத்தின் தேவை இதுவாகும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே" - இது இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது மகாகவி பாரதியார் பாடிய பாடலாகும். நமது மக்களின் நல்வாழ்வு, கண்ணியம் மற்றும் சுதந்திரமான தேர்வு ஆகியவை நமது தலைமையின் முதன்மையான குறிக்கோளாக இருக்கும்போது ஒற்றுமை அடையப்படும் என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை. எங்கள் மக்களின் உண்மையான அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக நீங்கள் எங்கள் வேண்டுகோளை காலத்தின் தேவை கருதி அதிக முக்கியத்துவம் கொடுத்து கருத்தில் எடுத்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



13ஐ முழுமையாகக் கொடுத்தா தமிழீழம் மலருமாம் எண்டு விமல் வீரவங்ச சொல்லுறாரு எலுவா..?

அடே பொடியா, உங்களப்போல இனவாதிகள் இருக்கிறதாலதாண்டா தமிழீழம் இன்னும் உயிர்ப்புடன் இருக்கு. வெட்கம், மானம் கெட்ட சில பச்சோந்தித் தமிழனுகளுக்கு அடிக்கடி தமிழீழத்த ஞாபகப்படுத்துதல் நல்லது. இதுசரி தமிழர்களுக்கு அப்ப என்ன தீர்வு நல்லது எண்டதயும் ஒள்ளுப்பம் சொல்லன் பாப்பம்!

# அஞ்சல் திணைக்கள சங்கத்தின் 16ஆவது வருடாந்த மாநாடும் பொதுக்கூட்டமும்





(பாறுக் ஷிஹான்)

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 16ஆவது வருடாந்த மாநாடும் பொதுக் கூட்டமும் நேற்று ஞாயிற்றுக்கிழமை (29) தலைவர் யூ.எல்.எம்.பைஸர் தலைமையில் மாளிகைக்காடு வாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபதி காமினி விமலசூரிய கலந்துகொண்டதுடன், மத அனுஷ்டானங்களும் மறைந்த அங்கத்தினர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலியும் நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வில் தபால் தொலைத்தொடர்பு ஊழியர் சங்கம் ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணி ஏற்பாட்டாளர் தலைவர் சிந்தக பண்டார உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தின் அக்கரைப்பற்று, மட்டக்களப்பு, அம்பாறை அஞ்சல் அத்தியட்சகர் பிரிவிலுள்ள தபால் அதிபர்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து முன்னாள் பிரதி அஞ்சல்மா அதிபரும் தற்போதைய வாழைச்சேனை பிரதேச செயலாளருமான ஜெயானந்தி திருச்செல்வம் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது உரையாற்றிய அவர்,

தபால் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றனர். எனது சேவை காலத்திலும் தபால் திணைக்களத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தொழிற்சங்கங்கள் எப்போதும் முற்போக்குத் தன்மையுடன் இயங்கினால்தான் ஒரு வலுவான தொழிற்சங்கமாக இயங்க முடியும். தொழிற்சங்கங்கள் வெறுமனே போராட்டங்களையும் வேறு விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமானால் அவை ஒரு வலுவான சங்கமாக அமையாது.

எப்போதும் நல்லவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு, தீயவைகளுக்கு எதிராக எதிர்த்து போராட வேண்டும். அந்த வகையில் அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கம் ஒரு முன்மாதிரியாக செயற்படுவதையிட்டு நான் பாராட்டுகின்றேன். அஞ்சல் திணைக்களத்திற்கு இத்தொழிற்சங்கம் ஒரு வழிகாட்டியாக செயற்படும் என்பதில் ஐயமில்லை. தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்கு அதன் உறுப்பினர்களின் பங்களிப்பு இன்றியமையாததொன்றாகும் என்றார்.பின்னர் நடப்பு வருடங்களுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் சங்கத்தின் UPDO NEWS எனும் செய்தி மடலும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போதைப்பொருளுடன் இருவர் கைது!

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவரை நேற்று முன்தினம் (28) மாலை கைதுசெய்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் பாலையூற்று, திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடையவர்களாவர். கிண்ணியா போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர்கள் கிண்ணியா பாலத்தில் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை பொலிஸில் தடுத்துவைத்துள்ளதோடு, நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு தயவு தாட்சண்யம் காட்டப்படமாட்டாது

அவர்களுக்கெதிரான விடயங்கள் மேற்கொள்ளப்படும்

## வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார

(மீராவோடை நிருபர்)



வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஒரு வருடத்துக்குள் மாத்திரம் போதைப்பொருளுக்கு எதிராக அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.எல்.ஆர்.பண்டார தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனைகளுக்கு எதிராக செம்மண்ணோடை பள்ளிவாசல்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் சம்மேளனத்தினரால் வெள்ளிக்கிழமை (27) விழிப்புணர்வுப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் நபர்களுக்கு எந்தவித கருணையும் காட்டப்படமாட்டாது. அவர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு எதிரான அனைத்து விடயங்களும் மேற்கொள்ளப்படும்.மேலும், வாழைச்சேனை - நாவலடி பகுதியில் 8 மாதக் குழந்தையின் தாய் ஒருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணை விடுவிக்கக்குமாறு எமக்கு அழுத்தங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவர் மீது எந்தவித அனுதாபங்களையும் காட்டாமல் குழந்தையுடன் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். ஆரம்பத்தில் எம்மால் மட்டுமே இப் பணிகளை செய்யவேண்டிய நிலை இருந்தது. ஆனால், இப்போது அனைத்து சமூகத்தினரும் ஒன்றிணைந்து போதைப்பொருளுக்கு எதிராகத் திரண்டிருப்பது எமக்கு பெரியதொரு பலத்தைத் தந்திருக்கிறது. இந்த முயற்சிக்கு நான் தலைவணங்குகிறேன் என்றார்.



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலை அபிவிருத்திக்குழுத் தலைவர் டொக்டர் எம்.ஏ.றக்கீஸ்து தலைமையில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது. இந்நிகழ்வில், வைத்திய சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் ரஜவெல்லே சுபூதி தேரர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எச்.எம்.சனூபரிடம் மருத்துவ உபகரணங்களைக் கையளித்தார். (அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# வெவ்வேறு பகுதிகளிலிருந்து கஞ்சாவுடன் இருவர் கைது!

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் கஞ்சா வைத்திருந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நகர்ப்பிரிவு மற்றும் ஹிஜ்ரா வீதி பிரதேசத்திற்கு சென்று, சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்த கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட முதலாவது நபரிடமிருந்து 550 மில்லி கிராம் கஞ்சாவும் மற்ற நபரிடமிருந்து 570 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (27) ஆஜர்படுத்திய போது பெப்ரவரி 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# உலக செய்திகள்

# அமெரிக்க பொலிஸ் தாக்குதலில் மற்றுமொரு கறுப்பினத்தவர் பலி!

## • நிக்கோல்ஸுக்கு நீதிவேண்டி நாடுமுழுவதும் மக்கள் போராட்டங்கள் வெடிப்பு
## • தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸார் ஐவரும் கைது





அமெரிக்காவில் போக்குவரத்து விதிமீறலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து பொலிஸார் தாக்கியதில் கறுப்பினத்தவரான ரயர் நிக்கோல்ஸ் என்பவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தைக் கண்டித்து உயிரிழந்த கறுப்பினத்தவரான ரயர் நிக்கோல்ஸுக்கு (Tyre Nichols) நீதிவேண்டி அமெரிக்கா முழுவதும் பல்வேறு நகரங்களில் போராட்டங்கள் வெடித்துள்ளன. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து மக்கள் போராட்டம் நடத்திவரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், நிக்கோல்ஸின் இறப்புக்கு வருத்தம் தெரிவித்துள்ளார். இதேவேளை, இவ்விவகாரம் தொடர்பாக 5 முன்னாள் பொலிஸ் அதிகாரிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் மெம்பிஸ் நகரில் கறுப்பினத்தவரான ரயர் நிக்கோல்ஸ் (வயது 29) என்பவர், போக்குவரத்து விதிகளை மீறி பயணம் செய்ததாகக் கூறி, ரெய்ன்ஸ் வீதி - ரோஸ் வீதி சந்திப்புக்கு அருகில் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். அப்போது ரயர் நிக்கோல்ஸுக்கும் பொலிஸாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒருகட்டத்தில் பொலிஸார் ஐவரும் ஒன்றுசேர்ந்து, ரயர் நிக்கோல்ஸை சரமாரியாகத் தாக்கினர்.

பொலிஸ் தாக்குதலில் நிக்கோல்ஸ் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்நிலையில், ரயர் நிக்கோல்ஸை பொலிஸார் தாக்கும் வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலானது.

**''அம்மா, அம்மா'' என அபயக்குரலெழுப்பிய நிக்கோல்ஸ்**

அந்த வீடியோவில், பைக்கில் வந்துகொண்டிருந்த நிக்கோல்ஸை பொலிஸார் திடீரென சுற்றிவளைக்கின்றனர். அப்போது அவரை தரையில் படுக்குமாறு எச்சரிக்கின்றனர். இதனையடுத்து நிக்கோல்ஸ் பொலிஸார் சொல்வதுபோல் செய்கிறார். ஆனால், அப்படியிருந்தும் அவரைத் தாக்குகின்றனர். நிக்கோல்ஸோ, ''நான்தான் நீங்கள் சொல்வதை செய்துவிட்டேனே'' எனக் கூறுகிறார்.

அப்போது இன்னொரு பொலிஸ் அதிகாரி, ''நீ உன் கைகளைப் பின்னால் கட்டுகிறாயா, இல்லை நான் அவற்றை உடைக்கவா?'' என்று கேட்கிறார். உடனே நிக்கோல்ஸ் கைகளைக் கட்டுகிறார். அப்படியிருந்தும் தாக்குதல் தொடர்கிறது. பொறுக்க முடியாமல் அவர் அலறுகிறார். பின்னர் அங்கிருந்து தப்பியோடுகிறார்.

அவரை டேஸர் எனப்படும் மின்சாரம் பாய்ச்சும் கருவி மூலம் வீழ்த்துமாறு சக அதிகாரிகள் கூற இன்னொரு பொலிஸ் அதிகாரி டேஸரை பயன்படுத்துகிறார். நிக்கோல்ஸ் வீழ்கிறார்.

அவர், ''அம்மா, அம்மா'' என்று கூக்குரல் இடுகிறார். 90 மீற்றர் தொலைவிலிருக்கும் தனது அம்மாவுக்கு தனது அபயக் குரல் கேட்காதா என்ற எதிர்பார்ப்புடன் கதறுகிறார். ஆனால், கதறலுக்கு இடையே தாக்குதல் நடக்க பலத்த காயமடைந்த நிக்கோல்ஸ் சாய்கிறார்.

இவை அனைத்துமே காவலர்கள் அணிந்திருந்த 'பொடி கெமரா' எனப்படும் உடலோடு பொருத்தப்பட்டிருக்கும் கண்காணிப்பு கெமராவில் பதிவாகியுள்ளன.

இச்சம்பவம் அமெரிக்கா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நிக்கோலஸுக்கு நீதி வேண்டி போராட்டங்கள் வெடித்துள்ளன.

சம்பவத்தில் ஈடுபட்ட ஐந்து பொலிஸ் அதிகாரிகளுமே கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள்தான். டடாரியஸ் பீன், டெமட்ரியஸ் காலி, எம்மிட் மார்டின், டெஸ்மாண்ட் மில்ஸ் ஜூனியர், ஜஸ்டின் ஸ்மித்




ஆகிய ஐந்து பேரும் கொலைக் குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் உயர்மட்ட விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் வெளியிட்ட டுவிட்டர் பதிவில்,

"பொலிஸார் நடந்துகொண்ட விதம் கடும் வேதனையளிக்கிறது. இந்த வீடியோவைப் பார்க்கும்போது நியாயமான முறையில் மக்கள் தங்களது கோபத்தை வெளிப்படுத்த வகை செய்துள்ளது. எனவே, போராட்டக்காரர்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நீதியை நாடுபவர்கள் வன்முறையில் ஈடுபடக்கூடாது'' என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக மினிசொட்டா மாகாணம், மினியாபொலிஸ் நகரில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ப்ளெய்ட் என்பவர் கடந்த 2021ஆம் ஆண்டு கைதுசெய்தபோது அவரிடம் பொலிஸார் இதுபோல் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதில் அவர் உயிரிழந்தார்.

டெரெக் சாவின் என்ற பொலிஸார் அதிகாரி நீண்ட நேரம் ஜோர்ஜ் ப்ளெய்டின் கழுத்தில் முழங்காலிட்டு அமர்ந்திருந்த விடியோ காட்சி வெளியாகி மிகுந்த கொந்தளிப்பை ஏற்படுத்தியது.




அதனைத் தொடர்ந்து, கறுப்பினத்தவர்களின் வாழும் உரிமையை வலியுறுத்தி நாடு முழுவதும் தீவிர போராட்டங்கள் நடைபெற்றன. அதில் 19இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

ஜோர்ஜ் ப்ளெய்டினின் மரணம் அமெரிக்கப் பொலிஸாரின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று கருதப்பட்டுவந்த நிலையில், தற்போது மேலுமொரு கறுப்பினத்தவர் கைது நடவடிக்கையின்போது அதே பாணியில் பொலிஸாரின் முரட்டுத்தனத்துக்கு பலியாகியிருப்பது மீண்டும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதையடுத்து, நாடு முழுவதும் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.




**கலிபோர்னியாவில் 3 பேர் சுட்டுக்கொலை**

இதேவேளை, கலிபோர்னியா பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 4 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஒரே மாதத்தில் கலிபோர்னியா மாகாணத்தில் நடத்தப்பட்ட நான்காவது துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இதுவாகும்.

## இன்றுடன் நிறைவுறும் ராகுலின் 'இந்திய ஒற்றுமை நடைப்பயணம்'



காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் ராகுல் காந்தியால் ஆரம்பிக்கப்பட்ட 'இந்திய ஒற்றுமை நடைப்பயணம்' இன்று (30) நிறைவடையவுள்ளது.

கடந்த செப்டெம்பர் 7ஆம் திகதி தமிழகத்தின் கன்னியாகுமரியில் தொடங்கிய இந்த நடைப்பயணம், 150 நாட்கள் நாடு முழுவதிலும் 75 மாவட்டங்களைக் கடந்துள்ளது. இன்று (30ஆம் திகதி) கட்சி தலைமையகத்தில் ராகுல் காந்தி தேசியக் கொடியை ஏற்றிவைத்து நடைப்பயணத்தை நிறைவுசெய்யவுள்ளார். அதனைத் தொடர்ந்து எஸ்கே மைதானத்தில் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேரணியில் கலந்துகொள்ள 23 எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக ஜம்மு காஷ்மீரில் இந்திய ஒற்றுமை நடைப்பயணத்தில் பாதுகாப்பு குறைபாடு இருந்ததாக ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், நேற்றைய நடைப்பயணத்திற்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இதில் ராகுல்காந்தியுடன், ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முப்தியும் கலந்துகொண்டார்.

## ஈரானில் 5.9 ரிச்டர் நிலநடுக்கம்: 7 பேர் உயிரிழப்பு; 100 பேர் காயம்




வடமேற்கு ஈரானில் 5.9 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானின் கோய் நகரில் நள்ளிரவில் திடீரென ஏற்பட்ட இந்நிலநடுக்கம் 5.9 ரிச்டராக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. பூமிக்கடியே 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள் பலமாகக் குலுங்கியுள்ளன. இதனால் பீதியடைந்த மக்கள் அலறி அடித்துக்கொண்டு வீடுகளிலிருந்து வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் ஏராளமான கட்டடங்கள் மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், கட்ட இடிபாடுகளில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பலருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருவதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மேலும் அண்டைநாடான அஜர்பைஜான் மாகாணத்தின் பல பகுதிகளிலும், தப்ரிஸ் உட்பட பல நகரங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

## திருடன் எப்போது சிக்குவான்?




கேரளாவில், நள்ளிரவில் நகைக்கடையில் புகுந்த எலியொன்று அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 'நெக்லஸ்' ஒன்றை இலாவகமாகக் கவ்விச் சென்றது. இதுதொடர்பான சிசிரிவி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

கேரளாவின் காசர்கோட் பகுதியிலுள்ள நகைக்கடையொன்றில் தங்க 'நெக்லஸ்' ஒன்று திடீரென மாயமானது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஊழியர்கள், அங்கிருந்த சிசிரிவி காட்சிகளை ஆய்வுசெய்தபோது, கடையின் சீலிங் வழியாக உள்ளே புகுந்த எலி, அக்கம் பக்கம் நோட்டமிட்டு அங்கிருந்த நெக்லஸை இலாவகமாக வாயில் கவ்விச் செல்லும் காட்சிகள் பதிவாகியிருந்தன. இதனையடுத்து திருடன் எலியாரைத் தேடி கடை ஊழியர்கள் வளைவீசியுள்ளனர். கிடைக்குமா நெக்லஸ்?

## இஸ்ரேல் – பலஸ்தீன் இடையே பதற்றம்

# மதவழிபாட்டுத் தலத்தில் 7 பேர் சுட்டுக்கொலை



இஸ்ரேலில் மதவழிபாட்டுத் தலத்தில் 7 பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர். இதனால் இஸ்ரேல் - பலஸ்தீன் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளதுடன், வன்முறைச் சம்பவங்களும் வெடித்துள்ளன.

இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தலைநகரில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிராக நடவடிக்கைகள் உடனடியாக தொடங்கப்பட்டுள்ளன. எங்களை யார் காயப்படுத்த முயன்றாலும், அவர்களையும் அவர்களுக்கு உதவி செய்பவர்களையும் நாங்கள் காயப்படுத்துவோம்'' என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் மேற்குகரை ஜெனின் நகரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய அதிரடி சோதனையின்போது வெடித்த வன்முறையில் 9 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கிழக்கு ஜெருசலேமின் வடக்கு பகுதியிலுள்ள மதவழிபாட்டுத் தலத்தில் பலஸ்தீனியர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். மதவழிபாட்டுத் தலத்துக்கு காரில் வந்த மர்மநபர் நடத்திய இந்த துப்பாக்கிச்சூட்டில் 7 அப்பாவி இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் கிழக்கு ஜெருசலேமைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் காரிலிருந்து இறங்கிய அவர், அங்கிருந்து தப்பிச்செல்ல முயன்ற அதிகாரிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியபோது சுட்டுக்கொல்லப்பட்டார். சம்பவ இடத்தைப் பார்வையிட்ட இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு,

''கடந்த பல ஆண்டுகளில் நாம் அறிந்த மிகப் பயங்கரமான தாக்குதல்களில் இதுவும் ஒன்றாகும். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல். பொதுமக்கள் சட்டத்தை தங்களது கைகளில் எடுக்கக்கூடாது" என்றார்.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து இஸ்ரேலியர்கள் மற்றும் பலஸ்தீனியர்கள் இடையே பதற்றம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் வெடித்துள்ளன. இச்சம்பவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## கொரோனா மரணங்களை மறைக்குமாறு மருத்துவர்களை கட்டாயப்படுத்தும் சீன அரசு?



சீனாவில் கொரோனா பலி எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதற்காக கொரோனா மரணங்களை மறைக்குமாறு மருத்துவர்களை அந்நாட்டு அரசு கட்டாயப்படுத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக சுகாதார விதிகளில் சீன அரசு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான குரல்கள் என்ற அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. கொரோனாவால் மரணம் ஏற்பட்டாலும், உயிரிழப்புக்கான காரணம் நிமோனியா, இதய நோய் பாதிப்புகள் என்றே குறிப்பிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா பரவல் தொடங்கியதிலிருந்தே 5 ஆயிரம் பேர் மட்டுமே பலியானதாகக் கூறிவந்த சீன அரசு, உலக நாடுகளின் அழுத்ததால் டிசம்பர் மாதம் கொரோனாவுக்கு 60 ஆயிரம் பேர் உயிரிழந்திருப்பதாக அறிவித்தது. ஆனால், உரிழப்புகளின் எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கும் என்றே தெரிவிக்கப்படுகிறது.

## ஏலம்போன வேல்ஸ் இளவரசி டயானாவின் 'கவுன்'





அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் நடைபெற்ற ஏலத்தில் வேல்ஸ் இளவரசி டயானாவின் ஆடை, இந்திய மதிப்பில் 5 கோடி ரூபாவுக்கு விற்பனையாகியுள்ளது.

ஆயிரக்கணக்கான முத்துகள், பட்டு இழைகள் சேர்த்து உருவாக்கப்பட்ட இந்த கவுன் 80 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் டொலர் வரை விற்பனையாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதை விட 5 மடங்கு அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளதாக கலைப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் ஏல நிறுவனமான சாத்பைஸ் தெரிவித்துள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7